# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 23 வெள்ளிக்கிழமை (08-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:217


# தேர்தல் வன்செயல் வேகம் தெற்கில் தினமும் அதிகரிப்பு

## கண்காணிப்பு நிலையம் அறிக்கை

கொழும்பு,செப்ரெம்பர்8

**தென்னிலங்கையில் தேர்தல் வன்செயல்கள் மிக வேகமாக அதிகரித்து வருகின்றன.சிறு சிறு வன்செயல்களை விட உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய பாரதூரமான வன்செயல்களே அதிகமாக இடம்பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் குழு(C.M.E.V) ஆகப்பிந்தி கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன,

கடந்தவருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் மாகாண சபைகள் தேர்தல் ஆகிய இரண்டுடனும் ஒப்பிடும்போது இம்முறை பாரதூரமான வன்செயல்கள் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாகவும் கண்காணிப்புக்குழு கவலை தெரிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 3 படையினர் காயம்

கொழும்பு,செப்.8

கைதடி, செம்மணி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் மோட்டார் தாக்குதல் நடத்தியதில் மூன்று படையினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அதே சமயம் - நெல்லியடிப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட கட்டடம் ஒன்றில் இருந்து கிளைமோர் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்றும் அது

(12ஆம் பக்கம் பார்க்க)

# குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல்களை நிறுத்துமாறு கூட்டணி வற்புறுத்தும்

## தேர்தல் ஆணையாளரின் இன்றைய மாநாட்டில்

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் குண்டுவீச்சு மற்றும் ஷெல் வீச்சுக்களை நிறுத்த உதவ வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரிடம் வலியுறுத்தப்பட உள்ளது.

ஒக்ரோபரில் நடைபெறவுள்ள தேர்தலை நீதியாகவும் சுதந்திரமாகவும் வன்செயல்கள் இல்லாத சூழலிலும் நடத்துவது குறித்து ஆராய்வதற்காக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா இன்று வெள்ளிக்கிழமை தேர்தலில் போட்டியிடும் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் மாநாடு ஒன்றை நடத்துகிறார்.

இந்த மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அக்கட்சியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் பங்குபற்றுவார்.

யாழ்ப்பாணத்தில் போர் நிலைமை நிலவுவது குறித்து இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்சேபம் தெரிவிக்கும் என்று கட்சி வட்டாரங்கள் கூறின.

இம்மாதம் 3ஆம் திகதி இரவும், 4ஆம் திகதியும் யாழ்ப்பாணப் பகுதியில் கண்மூடித்தனமான முறையில் விமானக் குண்டுவீச்சும்,கடும் ஷெல் வீச்சும் நடத்தப்பட்டதால் மேலும் மேலும் மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிப் போகின்றார்கள். பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்த நிலை நீடித்தால் யாழ்.மாவட்டத்தில் அமைதியான, நீதியான தேர்தலை நடத்தமுடியாது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## விமானங்களின் பேரிரைச்சலால் நோயாளர்களுக்குப் பாதிப்பு!

### செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிடம் முறையீடு

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்.போதனா வைத்தியசாலைச் சுற்றாடலில் யுத்த விமானங்கள் தாழப்பறப்பதால் அவற்றின் இரைச்சல் நோயாளர்களைப் பதற்றமடையச் செய்கிறது. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி ந.கனகரத்தினம் மேற்கண்டவாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் வைத்தே ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலை பிரதேசத்தில் இடைவிடாது தொடரும் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களின் பேரிரைச்சல்களினால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.ஆஸ்பத்திரிக்கு மேலாக மிகவும் தாழப்பறந்து குண்டுவீச்சு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயில் மோதலில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா,செப்.8

நாகர்கோயில் பகுதியில் கடந்த 6ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது அரசி (சின்னத்தம்பி தங்கேஸ்வரி - மட்டக்களப்பு) என்ற புலி உறுப்பினர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (இ-9)

# மோதல்களின் போது எடுத்து வரப்படும் பெரும் எண்ணிக்கையான சடலங்களை ஆஸ்பத்திரியில் பேணமுடியாத நிலை!

## மாற்று இடவசதி கோருகிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் அதிக எண்ணிக்கையான சடலங்களை வைக்கமுடியாது. எனவே மோதல்களில் உயிரிழப்போரின் உடல்களை வேறு இடங்களில் வைத்துப் பேணுவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ்.ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் செல்வி ந.கனகரத்தினம்.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கும் அரச அதிபர், படைஅதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள் ஆகியோருக்கும் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதும் இது வரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

இதுதொடர்பாக 'உதயன்' செய்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் சுவரொட்டி ஒட்டியோர் மீது பருத்தித்துறையில் கிரனேட் தாக்குதல்!

## ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் உட்பட நால்வர் காயம்

வடமராட்சி,செப்.8

பருத்தித்துறை ஓராங்கட்டையில் தேர்தல் சுவரொட்டி ஒட்டிக்கொண்டிருந்த ஈ.பி.டி.பி. அமைப்பு உறுப்பினர்கள் மீது நேற்று இரவு 7 மணியளவில் கிரனேட்வீச்சு இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் சேகர், பிரசாந் என்ற இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும், இரு பொதுமக்களும் காயம் அடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3-173)



நேற்று வெளிநடப்புச் செய்த யாழ்.செயலக ஊழியர்களுடன் 512 ஆவது படையணி அதிகாரியான கேணல் மஞ்சுள கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம். படையணி அதிகாரியுடன் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும் காணப்படுகிறார்.

## யாழ்.செயலக ஊழியர் நேற்று வெளிநடப்பு!

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்.அரச செயலக காவலாளி ஒருவர் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தை ஆட்சேபித்து யாழ்.செயலக ஊழியர்கள் நேற்று வெளிநடப்புச் செய்தனர்.

காலை 10.15 மணிக்கு இந்த வெளிநடப்பு இடம்பெற்றது.

சம்பவ நேரம் கடமையில் இருந்த 5 காவலாளிகளில் ஒருவரான நா.சுபாதர்சன் (வயது 22) என்பவரே தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஊழியர்களின் வெளிநடப்பினால் யாழ்.செயலகத்தின் அனைத்துப் பணிகளும் சுமார் 2 மணித்தியாலங்கள் வரை ஸ்தம்பிதம் அடைந்தன.

ஊழியர்களின் வெளிநடப்பினை அடுத்து யாழ்.செயலகத்துக்கு வந்த 512ஆவது பிரிகேட் அதிகாரி மேஜர் மஞ்சுள யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் முன்னிலையில் ஊழியர்களைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

மேஜரின் உறுதிமொழியை அடுத்து ஊழியர்கள் அனைவரும் கடமைக்குத் திரும்பினார்கள். (இ-5-ரி)

# கப்பல் மூலம் 985 பயணிகள் இன்று திருமலை புறப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.8

விசேட கப்பல் ஒன்று மூலம் இன்று 985 பயணிகளை காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் பயணஞ்செய்ய பயணச்சீட்டுப் பெற்றவர்களை இன்று காலை 6மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்தில் சமூகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலில் போட்டியிட ஒப்பமிடவில்லை என மறுப்பு

யாழ்ப்பாணம்,செப்.8

"நான் எந்த அரசியல் கட்சி சார்பிலும் தேர்தலில் போட்டியிட சம்மதம் தெரிவிக்கவும் இல்லை; எந்தவொரு நியமனப் பத்திரத்திலும் கையெழுத்திடவும் இல்லை என்பதனைத் திட்டவட்டமாக தெரிவிக்க விரும்புகிறேன்.நியமனப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஜெயரட்ணம் அப்பாத்துரை என்பவர் நான் அல்ல."

இவ்வாறு துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளர் அப்புத்துரை ஜெயரத்தினம் அறிவித்துள்ளார்.

"வேட்பாளர் பட்டியலில் அமைச்சுச் செயலர்களும்!" என்ற தலைப்பில் 05.09.2000 ஆம் திகதிய உதயனின் முதலாம் பக்கத்தில் வெளியான செய்தி குறித்து எழுதிய கடிதத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## அறிவித்தல்

தேசிய கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை [N.A.I.T.A] ஊடாக இலங்கை மின்சார சபையில் பயிற்சி பெற்ற அனைத்து பயிலுநர்களுக்குமான வேலை விடயம் சம்பந்தமாக உரிய அதிகாரிகளுடன் உரையாடியதன் விவரத்தினை நேரில் வந்து என்னிடம் அறிந்து கொள்ளவும்.

சு.மகிழ்நாதன்,
(நிர்வாக உறுப்பினர்)
சுன்னாகம் மத்தி,
சுன்னாகம்.

(78111)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி மாணவி
பொ.மதி அவர்களது அன்புச் சகோதரி
**செல்வி குமுதினி பொன்னுத்துரை**

அவர்களின் அகாலச் செய்தி அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அவர்தம் இழப்பால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர்ப் பூக்களைக காணிக்கை யாக்குகின்றோம்.

உயர்தர மாணவர் மன்றம்.
யா/யூனியன் கல்லூரி.

(78135)

## கண்ணீர் அஞ்சலி



மண்ணுலகில் 1964 - 04 - 03

விண்ணுலகில் 2000 - 09 - 07

எமது கழகத்தில் கல்வி பயிலும்
செல்வன் ம.கவாஸ்கர், செல்வி ம.பிரியா
ஆகியோரின் அன்புத் தாயாரும்
07.09.2000 அன்று இறைபதம் அடைந்த
எமது நிலையத்தின் அங்கத்தவருமாகிய

திருமதி
**சியாமளாதேவி மகாதேவன்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம்

சரஸ்வதி சன ச.நிலையம்,
சரஸ்வதி விளையாட்டுக் கழகம்,
சரஸ்வதி இளைஞர் கல்வி மேம்பாட்டுக் கழகம்,
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(78136)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் வைத்திலிங்கம்

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் வைத்திலிங்கம் காலமானார்.

இவர் சோதிமலரின் அன்புக்கணவரும் நந்தினி(லிகிதர்,பால் பண்ணை), தயாபரன்(உரிமையாளர், வீடியோ நிமல்), சசிபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கோணேசன் உமைபாலன்(சிற்றூழியர், அரியாலை ஸ்ரீ பாரதி வித்தியாசாலை) அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2000) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயாபரன் (மகன்)
(உரிமையாளர், வீடியோ நிமல்)

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

(C/12859)

### திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

சரசாலை, கனகம்புளியடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி அவர்கள் நேற்று (07.09.2000) வியாழக்கிழமை சுன்னாகத்தில் காலமானார்.

அன்னார் திரு திருமதி தம்பிராசா தம்பதிகளின் புதல்வியும் சுன்னாகம் தெற்கு சி.சுப்பிரமணியம் (முன்னாள் இ.போ.ச நடத்துநர், கோண்டாவில்) அவர்களின் அன்பு மனைவியும் ரவிராஜ்(இந்தியா), நிதிராஜ்(சுவிஸ்), திருமதி து.ரவிலா(இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2000) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் தற்காலிக இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய பொலீஸ் நிலைய வீதி,*
*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
சி.சுப்பிரமணியம் (கணவர்)

(C/12858)

## மாதாந்த உதவிப் பணம்

சண்டிலிப்பாய்,செப்.8

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் வசித்து வரும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் அவர்களுக்கான கொடுப்பனவை தற்போது தாங்கள் தங்கியுள்ள பகுதி தபால் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை -

மருதங்கேணி, பளை, நல்லூர் ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய்ப் பிரிவில் வசித்து வரும் பொதுசன மாதாந்தக் கொடுப்பனவைப் பெறுபவர்கள் மானிப்பாய் தபாலகத்தில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-135)

## மருந்து விநியோகம்

சண்டிலிப்பாய், செப்.8

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலை, இணுவில் அரசினர் மத்திய மருந்தகம், சுன்னாகம் அரசினர் மத்திய மருந்தகம், அளவெட்டி அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றுக்கு இந்த வருட மூன்றாவது காலாண்டுக்குரிய மருந்து வகைகள் கடந்த வாரம் விநியோகம் செய்யப்பட்டன. யாழ் சுகாதாரத் திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவு, திணைக்கள லொறி மூலம் இம்மருந்து வகைகளை நேரடியாக கொண்டு சென்று விநியோகம் செய்துள்ளது.

(ஐ-135)

## மூக்குக்கண்ணாடி வழங்கல்

சண்டிலிப்பாய்,செப்.8

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் கண்பார்வை குறைந்த - வறுமை நிலையிலுள்ள - இரண்டு பேருக்கு வடக்கு கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கண்ணாடிகள் வந்து சேர்ந்தவுடன் இவர்களுக்கு வழங்கப்படுமென்று சமூக சேவை உத்தியோகத்தர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-135)


**திகழ் கல்வி நிறுவனம்**

கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.

A/L 2001 (Paper Class)

2002 கணித உயிரியல் பிரிவு

**பௌதிகவியல்**
K.றமேஸ்(B.Sc.)

**இரசாயனவியல்**
K.பவான்(B.Sc.)

**இணைந்தகணிதம்**
G.ஐங்கரன் (B.Sc.)

வகுப்புகள் நடைபெறுகின்றன.
Paper Class நாளை ஆரம்பம்
மாலை 3 மணி

(C/12853)

**நாகம்ஸ்**
சுன்னாகம்

12 ஆம் திகதி வரை
அஜித் - ஷாலினி
நடிப்பில்

**அமர்க்களம்**

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00,2.30 (பு.நே.)

(78171)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)

கார்த்திக், கௌசல்யா,
அப்பாஸ், ஹீரா, ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்

**பூவேலி**

காட்சிகள்: 10.30, 2.00
(புதிய நேரம்)

(C/12325)


# துர்க்கையம்மன் தேர் நாளை

யாழ்ப்பாணம்,செப்.8

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வசந்தமண்டபப் பூசை காலை 7 மணிக்கு இடம்பெற்று 8.30 மணியளவில் அம்பாள் தேரில ஆரோகணிப்பார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழா காலை இடம்பெறும்.

(இ-7)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சீவரெத்தினம் செல்லம்மா

கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், அலுத்மாவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீவரெத்தினம் செல்லம்மா (05.09.2000) செவ்வாய்க்கிழமையன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் இளைப்பாறிய சுங்கத் திணைக்கள ஊழியர் சீவரெத்தினத்தின் அன்பு மனைவியும் சந்தானலக்சுமியின் (லண்டன்) அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுங்கத் திணைக்கள ஊழியர் வீரசிங்கத்தின் அன்புச் சகோதரியும், சரஸ்வதியின் அன்பு மைத்துனியும், ரவீந்திரன், ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீரெங்கநாதன், ஸ்ரீநிவாசன், ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2000) வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

*கரம்பன் கிழக்கு,*
*பாலக்காட்டுச் சந்தி,*
*ஊர்காவற்றுறை.*

தகவல்
நாதன்,வாசன்
(மருமக்கள்)

(78131)

### விவேகானந்தன் சிறிஸ்கந்தவேள் (பாபு)

தாவடி வடக்கு விவேகானந்தன் சிறிஸ்கந்தவேள் (பாபு) அவர்கள் கொழும்பில் நேற்று (07.09.2000) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*"கஜானாஸ்"*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

சு.பொ.விவேகானந்தன்
(தகப்பன்)
அண்ணா தொழிலகம்.
இணுவில்.

(78132)

### நாகலிங்கம் பரஞானசம்பந்தபிள்ளை

வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரம், முடிப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பரஞானசம்பந்தபிள்ளை அவர்கள் நேற்று (07.09.2000) வியாழன் வேலணையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சவுந்தரநாயகிஅம்மை அவர்களின் அருமைக் கணவரும் சிவலோகநாதன்(கனடா), சிவகணநாதன், ஞானரூபி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி காமாட்சிப்பிள்ளை(கனடா), திருமதி சடாட்சராம்பாள் (தட்டெழுத்தாளர், தாதியர் பயிற்சிப் பாடசாலை - யாழ்ப்பாணம்), ச.முருகமூர்த்தி (மூத்தவிநாயகர் கோயில், காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமனும் க.சஞ்சீவி (கனடா), பிரணவன் ஆகியோரின் அருமைப்பேரனும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், ஞானாம்பிகை ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி அம்மா, இரத்தினம்அம்மா, ச.மகாலிங்கம் (முன்னாள் கிராம அலுவலர், சமாதான நீதிவான், மரண விசாரணை அதிகாரி), மற்றும் விசாலாட்சிஅம்மா (வெற்றிலையூர்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், வேலாயுதம், மங்களநாயகி, சண்முகம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வேலணை மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்திற்கு இன்று (08.09.2000) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
*ப.சிவகணநாதன்(வரதர்),*
*வேலணை மேற்கு,*
*வேலணை.*

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(78122)

### திருமதி இராமலிங்கம் நாகமுத்து

(3ஆம் வட்டாரம், நயினாதீவு)

திருமதி இராமலிங்கம் நாகமுத்து அவர்கள் 07.09.2000 நேற்று நயினாதீவில் காலமானார்.

அன்னார் மு.இராமலிங்கம் (முன்னாள் நாகபூசணி அம்மன் கோவில் கணக்காளர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், இ.ஜெயலட்சுமி (சேவைக்கால ஆலோசகர், இந்துசமயம், தீவக வலயம்), இ.தனலட்சுமி (ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி) திருமதி விஜயலெட்சுமி ஞானசூரியர், திருமதி ஞானசேகரி விக்கினராஜேஸ்வரன் (ஆசிரியை, குருநாகல் இந்து தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் காசிலிங்கம் ஞானசூரியர் (மண் ஆராய்ச்சியாளர்), க.விக்கினராஜேஸ்வரன் (சேவைக்கால ஆலோசகர், கணிதம், நிக்கரவெட்டியா வலயம்) ஆகியோரின் மாமியாரும் ஞா.சிவக்குமரனின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.09.2000 நேற்று நயினாதீவில் நடந்தேறியது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*3ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு*

தகவல்
மு.இராமலிங்கம்
(கணவர்)

(78137)

### சாமுவேலு சின்னத்துரை

நீர்வேலி..., தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்ட சாமுவேலு சின்னத்துரை நேற்று (07.09.2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஜீவன், ராணி, சோதி, சாந்தன், ஜீவராசன், கௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லக்குமார், சுதா, பருத்தித்துறை ஜீவன், பரமேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2000) வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு சங்கரத்தை வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

*சங்கரத்தை,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
செல்லம்மா செல்லக்குமார்
குடும்பம்

(78134)




# போர்களை முடிவுக்கு கொண்டுவர ஐ.நா.பிரகடனத்தில் வலியுறுத்தல்!

நியூயோர்க்,செப்.8

உலகில் போர்களை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்தும், போர்த் துயரங்களில் இருந்து பாதிப்படையும் மக்களை மீட்பது தொடர்பாகவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நா.சபை உத்தேசப் பிரகடனத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

அமெரிக்காவில் நடந்து வரும் புத்தாயிரமாண்டின் முதல் ஐ.நா. உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட உள்ள இந்த 9 பக்கப் பிரகடனம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் உலக நாடுகளின் தலைவர்களிடையே சுற்றுக்கு விடப்பட்டுள்ளது.

இந்தப் பிரகடனத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

கடந்த 10 ஆண்டுகளில் போர்களினால் 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். அமைதிப் பாதுகாப்பை பலப்படுத்த உறுப்புநாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

வறுமை ஒழிப்பு, கல்வி மேம்பாடு, எய்ட்ஸ் நோய் ஒழிப்பு ஆகியவற்றுக்கான உரிய நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

ஜனநாயகத்தை மேம்படுத்தவும் மனிதஉரிமை மீதான கௌரவத்தை வலுப்படுத்தவும், அடிப்படை உரிமைகளை காக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவும் நாடுகள் தகுந்த புரிந்துணர்வுடன் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இவ்வாறு உத்தேசப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. இவை தவிர சுற்றுச் சூழல் சீர்கேடு உட்பட ஐ.நா.சபை நிறைவேற்ற வேண்டியுள்ள பல இலக்குகள் உத்தேசப் பிரகடனத்தில் இடம்பெற்றுள்ளன.(ஓ)

# தொலைபேசி ஊழியர்கள் வேலைநிறுத்தம்;

# இந்தியாவில் தகவல் தொடர்பு ஸ்தம்பிதம்!

## வர்த்தகம், மருத்துவம் உட்பட பலதுறைகளில் பெரும்பாதிப்பு!!

புதுடில்லி,செப்ரெம்பர்.8

**இந்தியாவில் தொலைத்தொடர்பு ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வர்த்தகப் பணிகள் முடங்கிக் கிடப்பதுடன் வானொலிச் செய்திச் சேவைகள் உட்பட தகவல் பரிமாற்ற துறையில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. தொடரும் இந்த வேலை நிறுத்தத்தால் பல கோடி ரூபா நஷ்டமேற்படும் என்று அஞ்சப்படுகிறது.**

தொலைத்தொடர்புத்துறையை மத்திய அரசு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம்திகதியிலிருந்து கூட்டுத்தாபனமாக்கத் தீர்மானித்திருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தொலைத்தொடர்பு ஊழியர் சங்கங்கள் அரசுடன் பேச்சு நடத்தியும் பயன் ஏற்படாததால் நேற்றுமுன்தினம் முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளன.

நாடு தழுவிய இந்தப் போராட்டத்தில் 3லட்சத்து 80ஆயிரம் ஊழியர்கள் கலந்து கொண்டுள்ளனர். போராட்டத்தைத் தொடர்ந்து 'பக்ஸ்' மற்றும் தொலைபேசித் தொடர்பு ஆகியவை மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. 'இன்ரநெட்' தொடர்பு, வெளிநாட்டுத் தொலைபேசி இணைப்பு போன்றவை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. இதனால் வர்த்தகப்பணிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

இந்திய வானொலியின் செய்திச் சேவைகள் உட்பட தகவல் பரிமாற்றச் சாதனங்களில் தொலைபேசி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் இடையூறுகள் உள்ளாகி உள்ளன.

வேலைநிறுத்தப் போராட்டம் நீடித்து, இதே நிலை தொடர்ந்தால் வர்த்தகத் துறையில் பலகோடி ரூபா அளவிற்கு நஷ்டம் ஏற்படலாம் என்றும் -

அத்துடன் மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் பரிமாற்றத்தில் உள்ள தடங்களினால் உயிரிழப்புகள் ஏற்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது. (ஒ)

### உலக அரங்கில்



கொலம்பியா அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வரும் இடதுசாரி தீவிரவாதிகளுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் அரசு சார்பு சுயபாதுகாப்புப் படையினரால் அவர்களது முகாமில் பல நாள்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த மரிபெல் நன்கரிவ் லோபஸ் என்ற ஆசிரியை தனது மகளுடன் விடுதலையாகி வெளியே வரும் காட்சி. இவர் 4 மாத கர்ப்பிணி என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் 5 உளவாளிகள் கைதாகினர்

புதுடில்லி,செப்.8

பாகிஸ்தானுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டின் கீழ் 2 முன்னாள் இந்திய ராணுவ அதிகாரிகள் உட்பட 5 பேரை இந்தியப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நேபாள நாட்டைச் சேர்ந்த இருவரும் அடங்குவார்கள். (ஒ)

# நீதிமன்றத் தடையாணையாலேயே எனது முயற்சி தோல்வியடைந்தது!

## 'நக்கீரன்' கோபால் ஆதங்கம்!!



'நக்கீரன்' கோபால்

பெங்களூர், செப்.8

வீரப்பன் நிபந்தனைகளில் குறிப்பிட்ட தமிழர்களை விடுதலை செய்ய நீதிமன்றம் தடை விதித்திருக்காது விட்டால், பணயக்கைதிகளை விடுவித்திருக்கமுடியும் என்று "நக்கீரன்" கோபால் தெரிவித்தார்.

கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணாவை பெங்களூரில் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கோபால்,

கன்னட நடிகர் ராஜ்குமார் உட்பட 4 பணயக் கைதிகளையும் விடுவிக்க வீரப்பனுடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றியளிக்கும் நிலையை அடைந்த சமயம் -

- 5 தமிழ்த் தீவிரவாதிகள் மற்றும் வீரப்பனின் 121 சகாக்களை விடுதலை செய்வதற்கு நீதிமன்றம் தடைவிதித்த செய்தி வீரப்பனுக்கு தெரிய வந்ததாகவும், அத்துடன் தனது முயற்சி தோல்வியை சந்தித்ததாகவும் தெரிவித்தார்.

வீரப்பனைப் பிடிக்க பாதுகாப்புப் படையை அனுப்பினால் அது பணயக்கைதிகளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் செயலாக அமையும் என்றும் கோபால் கூறினார்.

வீரப்பனால் கடத்தப்பட்ட நடிகர் ராஜ்குமார் உள்ளிட்டோரை விடுவிக்க இரு மாநில அரசுகளின் தூதராகச் சென்றிருந்த கோபால் தனது முயற்சியில் தோல்வியடைந்து திரும்பியிருப்பது தெரிந்ததே.

# பங்களாதேஷில் 12 ராணுவத்தினரை தூக்கிலிட்டது சட்ட விரோத செயல்!

## நாடாளுமன்றக்குழு அறிவிப்பு!!

டாக்கா,செப்.8

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி ஜியாவுல் ரஹ்மானின் படுகொலைக் குற்றவாளிகளான 12 இராணுவ அதிகாரிகளை தூக்கிலிட்டது சட்டவிரோதமான செயல் என்று அந்த நாட்டு நாடாளுமன்ற விசாரணைக் குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் இராணுவப் புரட்சி நடந்த போது ஜனாதிபதி ரஹ்மான் படுகொலை செய்யப்பட்டார். இவரது கொலை தொடர்பாக 12 ராணுவ அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டது. விசாரணைகளின் பின்னர் அவர்கள் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட நாடாளுமன்றக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் -

இராணுவ அதிகாரிகள் தூக்கிலிடப்பட்டதன் பின்னணியில் மிகப் பெரிய சதித்திட்டம் இருந்ததாகவும் -

அவர்கள் தமது தரப்பு வாதங்களை முன்வைக்க வாய்ப்புத் தரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# கிழக்கு திமோரில் அமைதிப்படையினர் படுகொலை!

டிலி,செப்.8

கிழக்குத் திமோரில் ஐ.நா.சமாதானப் படை வீரர்கள் மூன்று பேர் இந்தோனேசிய அரசு சார்பு ஆயுதக் குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மேற்கு திமோரின் எல்லைப்புறம் அருகே அமைக்கப்பட்டிருந்த அகதிகள் முகாம் அருகே கண்காணிப்புப் பணியில் சமாதானப் படையினர் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்குத் திமோரின் அமைதிப் பணியில் ஈடுபடும் ஐ.நா. ஊழியர்கள் மீது சுதந்திரத்தை விரும்பாத ஆயுதக்குழுக்கள் தாக்குதல் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

## ஜப்பான் - ரஷ்யா இடையேயான

# குரில்ஸ் தீவுகள் குறித்த பேச்சுகளில் உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை

டோக்கியோ,செப்.8

குரில்ஸ் தீவுகள் தொடர்பாக எந்தவித உடன்பாடும் ஏற்படுத் தப்படாத நிலையில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஜப்பானிலிருந்து நாடு திரும்பினார்.

1945ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஜப்பானுக்குச் சொந்தமான குரில்ஸ் தீவுகளை ரஷ்யா ஆக்கிரமித்துக் கொண்டது.

அந்தத் தீவுகளை மீண்டும் தன்னிடம் ஒப்படைக்கும்படி ஜப்பான் கோரி வருகின்றபோதிலும் ரஷ்யா ஒத்துக்கொள்ள மறுத்து வருகிறது.

கடந்த ஞாயிறு அன்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஜப்பான் சென்றபோது குரில்ஸ் தீவுகள் பிரச்சினை பேச்சின் மூலம் தீர்க்கப்படும் என்று நம்பப்பட்டது.

ஆனால் ஜப்பானியப் பிரதமர் யோஷிரோ மோரியுடன் ரஷ்ய அதிபர் புடின் தீவிர பேச்சுவார்த்தை நடத்திய போதும் குரில்ஸ் தீவுகள் குறித்து எந்த வித உடன்பாட்டையும் ஏற்படுத்த முடியவில்லை. இதனை அடுத்து ஜப்பானிய விஜயத்தை முடித்துக்கொண்டு புடின் நாடு திரும்பினார்.

குரில்ஸ் விவகாரம் ஜப்பானுக்கு தன்மானப் பிரச்சினையாக இருந்து வருவதாகவும், ரஷ்ய அரசு உள்ளூர் தேசியவாதிகளின் எதிர்ப்புகளுக்கு அஞ்சித் தீவுகளை ஒப்படைக்க மறுத்து வருவதாகவும் கருதப்படுகிறது. (ஒ)

கல்வித்துறை சிறப்புற
தரமும் வளங்களும் மென்மேலும் அதிகரிக்க
கல்வித்துறைக்குக் கடந்த காலத்தில் ஆற்றிய பணி
எதிர்காலத்திலும் தொடர. எம்மை ஆதரித்திடுவீர்!

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம்
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட் + ஈரோஸ்)

X

(C12850)

# இலங்கை, இந்தியாவுடனான எனது உறவு தீர்வுக்கு உதவும்

## வரதராஜப் பெருமாள் தெரிவிப்பு

கொழும்பு, செப். 8

இலங்கை—இந்தியத் தலைவர்களுடன் எனக்குள்ள உறவு, இன நெருக்கடியைத் தீர்த்துவைப்பதற்கு எடுக்கப்படுவரும் முயற்சியில் முக்கியமான பங்கை வகிக்கும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அ. வரதராஜப்பெருமாள்.

யாழ்.மாவட்டத்தில் சுயேச்சைக்குழுவில் போட்டியிடும் பெருமாளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது தேசியப் பட்டியலில் சேர்த்துள்ளது.

'த ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியிலேயே பெருமாள் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகளைப் பலப்படுத்தும் எண்ணத்துடனேயே பொ. ம. ஐ. முன்னணி என்னை தேசியப் பட்டியலில் இடம்பெறச் செய்துள்ளது. வடக்கு — கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில்— பொ. ஐ. முன்னணியின் வெற்றிக்காக உழைக்கவுள்ளேன்— என்றும் பெருமாள் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலம் இந்தியாவில் ராஜஸ்தானில் தலைமறைவாக வாழ்ந்த பெருமாள் கடந்த ஜனவரியில் நாடு திரும்பி இருந்தார் (ஐ-20)

### கல்வி முன்னேற்றத்துக்காக

# வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு நிதி உதவி

வலி. கிழக்கு, செப். 8

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக நல்லூர் பிரதேச சபை நிதிஉதவியினை வழங்கவுள்ளது.

கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய பதினொரு மாணவர்களும், 98 ஆம் ஆண்டு ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்றுள்ள நான்கு மாணவர்களும் இந்த உதவியைப் பெறவுள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு தலா 3 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும், ஜீ. சி. ஈ உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

இந்த நிதியினைப் பெறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர்கள் வருமாறு:-

த. கவிதா, வே. பிருந்தா, அ. பிரசாந்தி, தி. தனுஷியா, சி. நிரோஜினி, அ. கார்த்திகா, கி. கிருஷ்ணதாசன், அ. அனுஷியா, ம. அருண், வா. வாமராஜ், உ. தமோனதன்.

இந்த நிதியினைப்பெறும் பல்கலைக்கழக மாணவர்கள் பெயர் வருமாறு;-

வ. குலத்துங்கன், ச. சதீஸ் ப.பகிரங்கன், ஆர்.றோகான்.

இவர்களுக்குரிய பணம் அவர்களது பெயரில் வங்கியில் இடப்பட்டு அவர்களுக்குரிய வங்கிப் புத்தகங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர்ப் பிரதேச சபை காரியாலயத்தில் வைத்து நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜனால் வழங்கப்படவுள்ளன. (க-180)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 8

யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்களை இன்று வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் திங்கட்கிழமையும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரை (கணக்காய்வு) சந்திக்குமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (க)

## பாதுகாவலர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.8

யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

காணாமற்போன அரச ஊழியர்களின் சம்பளவிடயம் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-5)

## முறைசாரா கற்கை நெறி

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில் தலை அலங்காரமும் ஒப்பனையும் கற்கைநெறி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. (ஐ)

## தவறவிடப்பட்ட வங்கிப் புத்தகம்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த நாகராசா பத்மராசா என்னும் முகவரியுடைய வங்கிப் புத்தகம் கண்டெடுக்கப்பட்டு 'உதயன்' பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (க)

## மனைப்பொருளியல் செயலமர்வு

யாழ். வலயத்துக்குட்பட்ட அனைத்து மனைப்பொருளியல் பாட ஆசிரியர்களுக்குமான மனைப்பொருளியல் பாட சேவைக் காலப் பயிலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருப்பதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-ரி)

## கால்நடை போதனாசிரியராக ஐவர் தெரிவு

கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்களாக ஐவர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக யாழ் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஏ. சிறிதரன் (171/2, பார் வீதி, மட்டக்களப்பு), செல்வி எஸ். றாஜினி (50/45, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்), ஆர். கணேசராசா (மே/பா. இராஜரட்ணம், சங்கானை மேற்கு), பி. செல்வகுமார் (எல்லை வீதி, மீசாலை மேற்கு), க. புவனேந்திரா (உசன், மிருசுவில்) ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் மேலதிக விவரங்களைப் பெற இலக்கம் 180, நாவலர் வீதியில் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-15)


வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில்

**இலவச கண்சிகிச்சையும் பொது மருத்துவ சிகிச்சையும்**

இடம்: யா\நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, வதிரி.

காலம்: 10-09-2000 ஞாயிறு முற்பகல் 10-மணிக்கு

கண்சிகிச்சையளிப்போர் (கண்பார்வைசோதனை):
பிரபல மூக்குக் கண்ணாடி நிபுணர்—
**எஸ். எம். பர்ணான்டோ குழுவினர்**

பொது மருத்துவ சிகிச்சையளிப்போர்:
மாவட்ட வைத்திய அதிகாரி—வைத்திய கலாநிதி
**லயன் எஸ். கதிரவேற்பிள்ளை அவர்களும் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும்.**

பற்சிகிச்சை அளிப்பவர்:
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைப் பல்வைத்திய கலாநிதி
**வே. ஜெயராசா அவர்கள்**

மேற்படி சிகிச்சைகளைப் பெற விரும்புவோர் 2000-09-10ல் நேரத்துடன் சமூகம் தந்து தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

என். சோமசுந்தரம்,
தலைவர்,
வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(சி/12856)


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப். 8

சுன்னாகம் கிழக்கு சிவபூதவராயர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (க)

★ ★ ★

வல்வை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலம் ஆலய மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 4½ மணிக்கு வல்வை முத்துமாரி அம்மன் கோயில் வீதியில் வேட்டைத் திருவிழாவும்—

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30-க்கு நடைபெறும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 7.30 மணிக்கு ஊறணி சமுத்திரத்தில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (க-30)

★ ★ ★

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான் தோன்றி ஸ்ரீ மனோன் மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகியது.

எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் 13 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (க)

★ ★ ★

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் கோயிலில் புதிய ''தண்டேஸ்வரர் விக்கிரகம்'' கடந்த 24 ஆம் திகதி பிரதிஷ்டை செய்து வைக்கப் பட்டது. (க-30)

★ ★ ★

சுழிபுரம் - பறாளை ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் ஆலய தொண்டர் சபையினர் கடந்த வெள்ளிக்கிழமைமுதல் தினமும் பன்னிரு திருமுறைப் படிப்பை காலையும் மாலையும் படித்து வருகின்றனர். (க-28)

★ ★ ★

வட்டுக்கோட்டை துணவி அரசடிப்பிள்ளையார் கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகியது.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் விசேட சங்காபிஷேகம், பூசையும் இடம் பெறும்.

உற்சவகாலங்களில் தினசரி உலகசமாதானத்திற்காகவும், நாடு நலம்பெறவும் அனைவரையும் பிரார்த்திக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

★ ★ ★

தம்பசிட்டி மாயக்கை ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும் இம்மஹோற்சவத்தின் ரதோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன் கிழமையும், சமுத்திரத் தீர்த்தத் திருவிழா 14 ஆம் திகதி வியாழக்கிழமையும் இடம் பெறும். (ஐ-173)

★ ★ ★

பருத்தித்துறை ஆத்தியடி பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக தினமான நாளை சனிக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறும்.

சங்காபிஷேகம், விசேட பூசை, வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா இடம்பெறும். (ஐ-15)

★ ★ ★

யாழ் போதனா வைத்தியசாலை சாமுண்டிகா தேவி சமேத ஸ்ரீசிவஞான வைரவ சுவாமி தேவஸ்தான, மணவாளக்கோல அஷ்டோத்திர சத கலச சங்காபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

இதற்கான கிரியைகள் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும்.

காலை 6 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 10 மணிக்கு மகா சங்காபிஷேகம் நடைபெற்று 11 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம் பெறும். பின்னர் சுவாமி வீதி உலாவருவார்.

வீதி உலாவைத் தொடர்ந்து ஆலயத்தில் மகேஸ்வர பூஜை நடைபெறும். (ஐ-15)

★ ★ ★

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

உற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க)

## இலவச மருத்துவ முகாம்


யாழ்ப்பாணம், செப். 8

வடபிராந்திய ஸ்ரீசத்யசாயி சேவா நிலைய இளைஞர் பிரிவினரின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது.

இம்முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (க)


**அறிவித்தல்**

**இடைக்காலப் பொதுக் கூட்டம்**



ஆட்டோ

உரிமையாளர் / சாரதிகளுக்கு

எதிர்வரும் 10-09-2000 ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணிக்கு (புதிய நேரம்) இடைக்காலப் பொதுக் கூட்டம் உப-தலைவர் திரு. போல் பொனிபஸ் அவர்கள் தலைமையில் முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்;

அங்கத்தினர் அனைவரும் தவறாது சமூகம் தரவும்.

(சி/12855) -நிர்வாகம்

**உதயன்**

## கண்ட மிச்சம்....!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் 240 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் போட்டியில் மொத்தம் 23 அணிகள் போட்டியிடுகின்றன.

வன்னி மாவட்டத்தில் ஆறு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் 216 பேர் களத்தில் இறங்கியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் இருபத்தொரு எம்.பிக்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் மொத்தம் 575 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர்.

196 எம்.பிக்களைத் தெரிவு செய்வதற்காகவும் 29 தேசியப் பட்டியல் உறுப்பினர்களை நியமிப்பதற்காகவும் 29 அரசியல் கட்சிகளும் 99 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 128 அணிகள் இம்முறை தேர்தல் களத்தில் மோதுகின்றன.

இந்தப் புள்ளி விவரங்களை ஜனநாயகத்தின் செயற்பாட்டில் தாராளத் தன்மையை எடுத்துக் காட்டினாலும் மக்களைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன. விகிதாசாரத் தேர்தல் முறையின் பாதகமான தன்மையையும் இந்த விவரங்கள் பெருமளவில் எடுத்துக் காட்டுகின்றன.

தேர்தல் வரும் போது மட்டும் மக்களிடம் நாடி வந்து விட்டுப் பின்னர் சோர்ந்து சோம்பேறிகளாகிவிடும் அரசியல்வாதிகளை உருவாக்கும் ஒரு 'தொழிற் கூடமாகவும்' விகிதாசாரத் தேர்தல் முறை அமைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

கடந்த பொதுத் தேர்தலுடன் - 1994 ஓகஸ்டில் நடைபெற்ற தேர்தலுடன் - ஒப்பிடும் போது, இம்முறை களத்தில் மோதும் அணிகளும், வேட்பாளர்களின் எண்ணிக்கையும் மிகப் பல மடங்கு அதிகம் என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. நாடாளுமன்றத் தேர்தல் சரித்திரத்திலேயே இம்முறை ஒரு "சாதனை" படைக்கப்பட்டுக்கிறது!

இத்தகைய மாற்றம் ஏற்பட்டதற்கு அரசியலில் அதிகம் பேருக்கு ஆர்வமும், ஆசையும் பிறந்ததற்குக் காரணம் ஒன்று உண்டு. நாடாளுமன்ற உறுப்பினரின் மாதாந்த வருமானம் பல மடங்காகி உள்ளதோடு, வசதிகள், சலுகைகள் என்பனவும் அதிகரித்துள்ளன. ஒரு தடவை எம்.பியாக நாடாளுமன்றத்தில் அமர்ந்து விட்டால், ஒரு சந்ததிக்குத் தேவையானதைத் தேடிக் கொள்ளலாம் என்ற அளவுக்கு வாய்ப்புக்கள் அதிகம். மக்கள் சேவை என்பதனைவிட சுயதேவையே - சுயசேவையே -இன்றைய அரசியலாகிவிட்டது.

தொகுதிவாரியான தேர்தலின் போது, மக்கள் ஆதரவு பெற்றவர்கள், அரசியல் அனுபவமும் அறிவும் சிறிதளவேனும் கொண்டவர்கள், மக்களுக்கு ஏதோ வகையில் சேவை செய்து அவர்கள் மத்தியில் பிரபல்யமும், அவர்களின் ஆதரவும் பெற்றவர்களே தேர்தலில் குதிப்பதுண்டு.

ஆனால் இப்போது வாக்காளர்களுக்கு தமது மாவட்ட வேட்பாளர் கறுப்பா சிவப்பா என்பது தெரியாமலே தேர்தல் நடைபெறுகின்றது. முகம் தெரியாத வேட்பாளருக்குத் தமது வாக்குகளை செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் வாக்காளருக்கு இப்போது! அரசியலுக்கு என்று ஒரு தகுதி, அனுபவம், செல்வாக்கு என்று எதுவுமே இல்லாத ஒருவரும் கட்சி என்ற மரத்துக்குப பின்னால் மறைந்து நின்று வாக்குக் கேட்கும் வசதி இந்த விகிதாசார தேர்தல் முறையின் பெரும் வேடிக்கை!

அதனைவிடவும் பெரிய வேடிக்கை என்னவெனில், தமிழ்ப் பகுதிகளில் அரசியல் வாதிகள் பல கூறுகளாகப் பிரிந்து நின்று போட்டியிடுவது தான்! இவர்களின் அரசியல் நிலைப்பாடுகள், 'இலட்சியங்களில்' பெரிதாக வித்தியாசங்களைக் காணமுடியவில்லை. தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதற்காக உழைப்பதே எல்லாத் தரப்பினரதும் அடிப்படைக் கொள்கையாக உள்ளது.

சிறு சில வேறுபாடுகளை மறந்து எல்லாக்கட்சிகளும் ஒரே அணியில் நின்று போட்டியிடும் அளவுக்குத் தானும் இவர்களிடம் ஒற்றுமையில்லை. ஒற்றுமைப்பட முடியாமைக்கு ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி பிளவுபட்டும் நிற்கிறார்கள். இந்தப் பிளவு சிங்களத் தீவிரவாதக் கட்சிகளும் யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் பின் புலத்தை உருவாக்கியிருப்பது தான் இப்போதைக்குக் கண்ட மிச்சம்!

# தேர்தல் முடிவில் அதிக செல்வாக்கு செலுத்தும் மனிதராக பிரபாகரன்!

## ரொய்ட்டர் விமர்சனம்

கொழும்பு,செப்.8

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளில் அதிகளவு செல்வாக்கைச் செலுத்தக் கூடிய ஒரு மனிதராக இருப்பவர் தேர்தல்களத்தில் குதித்திருக்கும் ஆயிரக்கணக்கான வேட்பாளர்கள் மத்தியில் உள்ள ஒருவரல்லர் என்றும், விடுதலைப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனே சூழ்ச்சித்திறன், படுகொலை, முழுமையான அரசியல் நடவடிக்கைகளால் தேர்தல் ரீதியான அளவீட்டுக் கருவியாகவும் காணப்படுவதாக ரொய்ட்டர் செய்தி விமர்சனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விரும்பியோ விரும்பாமலோ பிரபாகரன், விடுதலைப் புலிகள் என்ற இரு காரணிகளையும் உதாசீனப்படுத்த முடியாது என்று மேற்கு நாட்டு இராஜதந்திரியொருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சமர்ப்பித்துள்ள புதிய அரசமைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பாக நாடாளுமன்றத் தேர்தல் கருதப்படுகிறது. சிங்களத் தேசியவாதிகளின் எதிர்ப்பு அதிகரித்ததால் சட்டமாக்கி நடைமுறைப்படுத்த முடியாமல் போயிருக்கும் புதிய அரசியலமைப்பை தேர்தலில் வெற்றி பெற்ற பின் முன்னெடுத்துச் செல்லப் போவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இந்த அரசமைப்பை நிராகரித்துள்ள விடுதலைப் புலிகள் மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுச் சட்ட மூலமாவதைத் தடுப்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளக்கூடு மெனவும், அதற்கேற்ப பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறாமல் இருப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் தேர்தலில் வெற்றி பெற்றால் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக உறுதியளித்திருக்கிறது.

ஐ.தே.க.அதிகாரத்தில் இருப்பது அதிகளவு சௌகரியமெனப் புலிகள் கருதுவதாகத் தெரிகிறது.

சிலசமயம் தமது ஆதரவாளர்களைத் தேர்தலில் வேட்பாளராகப் புலிகள் நிறுத்தக் கூடுமென்ற ஊகம் நிலவுகிறது. இந்தத் தந்திரோபாயத்தை அவர்கள் கைக்கொள்வார்கள் என்பது தனது அபிப்பிராயம் என்று ஒருவர் கூறியுள்ளார். அவர்களின் ஆதரவாளர்கள் வெற்றி பெற்றால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியோ, ஐ.தே.கவோ அறுதிப் பெரும்பான்மையைத் தேர்தலில் பெறமுடியாமல் போய்விடும். அத்துடன் யாழ். குடாநாட்டில் இழந்த பகுதியைத் திரும்பக் கைப்பற்ற வேண்டுமென்ற நெருக்குதலில் அரசாங்கம் இருக்கிறது. குடாநாட்டில் ஆரம்பமான இராணுவ நடவடிக்கை இதனை வெளிப்படுத்துவதாக உள்ளது -

என்று ரொய்ட்டர் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-6)

## சங்கக்கிளைகள் திறப்பு

தென்மராட்சி,செப்.8

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் மேலும் இரு கிளை நிலையங்கள் கடந்த வாரம் வலிகாமம் பகுதியில் திறக்கப்பட்டுள்ளன.

சங்கத்தின் 13 ஆவது கிளை சங்கானை நகரிலும், 14 ஆவது கிளை சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அத்துடன் சங்கத்தின் மொத்தக் களஞ்சிய நிலையம் ஒன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு அருகில் திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## மாணவர் விவரம் சேகரிப்பு

தென்மராட்சி,செப்.8

வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவர்களின் விவரங்கள் கல்லூரி அதிபரினால் திரட்டப்பட்டு வருகின்றன.

கோண்டாவிலில் இயங்கும் டிறிபேர்க் கல்லூரி தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் உரிய படிவங்களில் விண்ணப்பிக்குமாறும் -

வடமராட்சியில் தங்கியுள்ள மாணவர்களுக்கான படிவங்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வழங்கப்படுவதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## ராஜீவ் கொலைச் சந்தேக நபரான சிவராசனின் உதவியாளர் கொழும்பில் கைதாம்!

கொழும்பு,செப்.8

ராஜீவ் காந்தியின் கொலையைத் திட்டமிட்டவர் எனக் கூறப்படும் ஒன்றைக் கண் சிவராசனின் உதவியாளர் எனச் சந்தேகிக்கப்படும் காந்தி மாஸ்டர் என்பவரை கொட்டாஞ்சேனையில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து கல்கிசை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளதாக 'லங்காதீப' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

சில முக்கிய பிரமுகர்களைக் கொலை செய்வதற்காகவே இவர் கொழும்பு வந்திருப்பது தெரிய வந்துள்ளதாகவும் -

நீண்டகாலமாக இந்தியாவில் வசித்து வந்த காந்திமாஸ்டர் இரு ஆண்டுகளுக்கு முன் வன்னி திரும்பி பல தாக்குதல்களில் பங்கு கொண்டிருந்தார் என்றும் -

கல்கிசை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இவர் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறார். (ஐ-186)

## இப்படியும் சைக்கிள் திருட்டு!

அரியாலை,செப்.8

சைக்கிள் திருட்டுக்கள் பல்வேறு தந்திரங்கள் மூலம் மேற் கொள்ளப்படுகின்றன. இது யாழ்.நகரில் கடந்த செவ்வாயன்று நடந்த சைக்கிள் திருட்டுச் சம்பவம்.

யாழ். நகரில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றுக்கு வந்த இளைஞர் ஒருவர் அங்கிருந்தவருடன் சிநேகிதபூர்வமான முறையில் உரையாடினார். பின்னர் ஆஸ்பத்திரிக்கு அவசரமாகச்செல்ல வேண்டியுள்ளதால் சைக்கிளைத் தந்துதவுமாறும் சிறிது நேரத்தில் திரும்ப வந்து ஒப்படைப்பதாகவும் கூறியுள்ளார். இதனை நம்பிய எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர் தனது சைக்கிளை அவரிடம் கொடுத்துள்ளார். சைக்கிளுடன் சென்ற இளைஞன் பல மணி நேரமாகியும் திரும்பி வரவில்லை. அந்த இளைஞன் சைக்கிளைத் தந்திரமாக அபகரித்துச் சென்றிருந்தது பின்னர் தான் தெரிய வந்தது. சைக்கிளுக்காகக் காத்திருந்தவர் ஏமாற வேண்டியதாயிற்று; தனது புதிய லுமாலா சைக்கிளைப் பறிகொடுக்க நேர்ந்துவிட்டது.

இப்படியும் திருடர்கள் நடமாடு வதால் சைக்கிள் உரிமையாளர்களே கவனம்! அவதானமாக இருங்கள்! (ஐ-17)

## ஆசிரியர் கல்வியில் புதிய பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,செப்.8

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டுகால சேவைமுன் உயர் தொழில்ப்பயிற்சி நெறிகளுக்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கவுள்ளோர் 98 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்பு நடைபெற்ற ஜி.சீ.ஈ.(உயர்தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி 24 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

அத்துடன் ஆரம்பக்கல்வி, சமூகக்கல்வி, நூலக விஞ்ஞானமும் தொடர்பாடலும், தமிழ், விவசாயம், மனைப்பொருளியல் ஆகிய பாடநெறிகளைக் கற்பதற்கு 220 புள்ளிகளுக்குக் குறையாமலும் -

விஞ்ஞான பாடநெறிக்கு 200 புள்ளிகளுக்குக் குறையாமலும் -

கணித பாடநெறிக்கு 160 புள்ளிகளுக்குக் குறையாமலும் -

தொழில்நுட்பக்கல்வி, சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய பாடநெறிகளுக்கு 180 புள்ளிகளுக்குக் குறையாமலும்

விண்ணப்பிப்போரின் தகைமைகள் இருக்கவேண்டும்.

இதேவேளை -

ஆங்கிலப் பாடநெறிக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியுடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது -

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியத்தில் விசேட சித்தியுடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பார்வையிடலாம் என்று அதன் பீடாதிபதி தெரிவித்துள்ளார். இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 22 ஆம் திகதியாகும்.

மேற்படி பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்போர் தமது விண்ணப்பங்களை 18 ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடம் சமர்ப்பித்தால் அவற்றைக் கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ-10)

## தென்மராட்சியில் இடம்பெயர்ந்த உபதபால் அதிபர்களுக்கு ஜூன் முதல் சம்பளம் இல்லை

சண்டிலிப்பாய்,செப்.8

தென்மராட்சி பிரதேசத்திலும் பளை, மருதங்கேணி ஆகிய பகுதிகளிலும் இடம்பெற்ற போர் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த பதில் உபதபால் அதிபர்களுக்கு கடந்த ஜூன் மாதத்திலிருந்து சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை. இவர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர்கள் சங்கம் கடந்த வாரம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

பின்வரும் முக்கிய கோரிக்கைகளும் இக்கடிதத்தில் இடம் பெற்றுள்ளன.

தபால் திணைக்கள அலுவலர்களுக்கு சனிக்கிழமைகளில் கடமையாற்றுவதற்கு கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும்போது இத்தினங்களில் கடமையாற்றும் உபதபால் அதிபர்களுக்கு இதற்கான கொடுப்பனவு எதுவும் வழங்கப்படுவதில்லை. ஆகவே இதற்கான கொடுப்பனவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

எட்டு வருடங்களுக்கு மேலாக பதில் உபதபால் அதிபர்களாக கடமையாற்றி வருபவர்களுக்கு பதவி நிரந்தரம் வழங்கப்படவில்லை. 180 நாள்களுக்கு மேல் கடமையாற்றியுள்ள சகல பதில் உபதபால் அதிபர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த 01-01-1996 ஆம் திகதியிலிருந்து உபதபால் அதிபர்கள் அரசாங்க அலுவலர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்ட போதிலும் 25 வருடங்களைப் பூர்த்தி செய்தவர்களுக்கு வருடாந்த சம்பள அதிகரிப்பு விடயத்தில் குறைபாடு காணப்படுகின்றது. இது நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

உபதபால் அதிபர்களுக்கு ஏனைய அரசாங்க அலுவலர்களைப் போல வருடத்தில் 45 நாள் லீவு வழங்கப்பட வேண்டும். தற்போது 28 நாள் லீவே வழங்கப்பட்டு வருகின்றது.

இக்கடிதத்தின் பிரதிகள் கொழும்பிலுள்ள தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர, வடமாகாண ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், ஈ.பி.டி.பி கட்சி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உபதபால் அதிபர்கள் சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஐ-135)

## தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.8

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ செல்லையா ரட்ணம், ஆஸ்பத்திரி வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

★ பொன்னம்பலம் நவரத்தினம், கச்சாய் வீதி, சாவகச்சேரி.

★ பொன்னையா நாகம்மா, புலோப்பளை கிழக்கு, பளை. (ஐ)

## நிவாரண பொருள் விநியோகம்

தென்மராட்சி,செப்.8

இடம்பெயர்ந்த மக்களுக்கான செப்ரெம்பர் மாதத்திற்குரிய நிவாரண பெர்மிட்டுக்கள் பிரதேச செயலகங்களால் வழங்கப்படுவதையடுத்து சாவகசசேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளிலும் பெர்மிட்டுக்குரிய உலர்உணவு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

(ஐ-117)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.8

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளதால் அது தொடர்பாகவும் முக்கிய விதிகள் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இதில் ஆராயப்படும். எதிர்வரும் பரீட்சை தொடர்பாகவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

இந்தக் கருத்தரங்கில் மத்தியஸ்தர்களும் மத்தியஸ்தர்களாக சேரவிரும்புபவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

**உதயவாக்கு**

*சில நேரங்களில் வாய் திறந்து பேசுவதை விட பேசாமல் இருப்பதே மிக்க பயனை அளிப்பதாகும்.*

*- காந்தியடிகள்*

**நாளை**

**ஆவணி 24**

**சனிக்கிழமை**

*திதி:* ஏகாதசி
முன் இரவு 7.24 வரை.
*நட்சத்திரம்:* உத்தராடம்
வைகறை 5.33 வரை
பரிவர்த்தன ஏகாதசி விரதம்
*சுபநேரம்:* 3.03 - 4.33
*ராகுகாலம்:* 9.03 - 10.33
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# ஆன்மீக வாழ்வு மலர்ச்சி பெறும் போது இறைவனின் தரிசனத்தை உணரலாம்

**சுவாமி சிவானந்தரின் 113 ஆவது ஜெயந்தி விழாவை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

ஒளிமிக்க ஆன்மீகக் கதிரவனாகிய குருதேவர் சுவாமி சிவானந்தர் திருவடிகளுக்கு வணக்கங்கள். சிவானந்த ஞானதெய்வம் யாண்டும் சுடர்விட்டுப் பிரகாசிப்பதாகுக. அச் சுடர் உலகெங்கும் வாழும் மக்கள் உள்ளத்தில் ஞான ஒளியை ஏற்றுவிப்பதாகுக.

இன்று புரட்டாதி மாதம் 8ஆம் திகதி குருதேவர் சுவாமி சிவானந்த மகராஜ் அவர்களின் 113ஆவது ஜெயந்தி தினமாகும். இப் புனிதமான தினத்தை உலகெங்கும் வாழும் குருதேவரின் குழந்தைகள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். சிவானந்தரின் பிறந்தநாள் விழா, சிவானந்தரின் கருணைக்கு நன்றி தெரிவிக்க மக்கள் எடுத்துக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமே. குருதேவரின் குழந்தைகள் ஒவ்வொருவரின் உள்ளத்தில் குடிகொண்டிருந்தாலும் ஆழம் காணமுடியாத அவருடைய உண்மைத்தன்மையை அறிய அதில் அமிழ்ந்து தேடுபவர்களுக்கு உதவும் பொருட்டே அவருடைய பிறந்தநாள் கொண்டாட்டம் உதவுகின்றது.

நமது வணக்கத்திற்குரிய குருதேவர் சுவாமி சிவானந்தர் ஆன்மீக வாழ்க்கை வாழும் முறையை நமக்கெல்லாம் வாழ்ந்து காட்டியுள்ளார். அவரைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு பொருளும் புனிதமானதே. ஒவ்வொரு செயலும் தெய்வீகமானதே. உலகப் பொருள்கள் அனைத்தும் கடவுளின் வெவ்வேறு வடிவங்கள். அவரது வாழ்வில் செயல் என்பது இறைவனுக்குச் செய்யும் அலங்காரம். அலுவல் என்பது இறைவழிபாடு, வாழ்வது என்பது பிரார்த்தனை செய்வது, உண்ணல், பருகுதல், பேசுதல், கேட்டல், உட்காருதல், நிற்றல், நடத்தல் முதலிய செயல்களையும் இறைவனை உணர நம்மைப் பக்குவப்படுத்தும் பயிற்சிகளாகவே கருதினார். ஒவ்வொரு செயலையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு செய்தால், உண்ணல், நடத்தல் முதலிய அவரது சாதாரண செயல்களிலும் தெய்வீகம் சுடர்



விட்டுப் பிரகாசித்தது. அவரது அனைத்துச் செயல்களும் ஆழ்ந்த பிரார்த்தனையுடனேயே செய்யப்பட்டன. இறை நினைவு நீங்காமலேயே அனைத்துச் செயல்களையும் ஆற்றினார். எந்தச் செயல் செய்தாலும் அவரது மனத்தின் ஒரு பகுதி இறைவனின் நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டேயிருக்கும்.

"இறைவா, நான் உன்னுடையவன், அனைத்துப் பொருள்களும் உன்னுடையனவே" என்ற புனித உணர்வு அவரது ஒவ்வொரு செயலிலும் நன்கு வெளிப்பட்டது. ஆன்மீகத்தைத் தவிர வேறு அம்சங்களுக்கு அவரது வாழ்வில் இடம் கிடையாது. "உங்கள் வாழ்வை ஆன் மீக மயமாக்குங்கள்" என்பதே சீடர்களுக்கு அவர் வழங்கும் அறிவுரை. மனித இனத்துக்கு அவர் வழங்கிய செய்திகள் அனைத்தின் சாரமே இதுதான். தன் வாழ்வை ஆன்மீக மயமாக்கியவன் வீடுபேறடைகின்றான். யாண்டும் திளைத்திருக்கின்றான்.

தெய்வீக நிலையை நாடும் நண்பர்களே, இறைவன் அன்பு வடிவானவர். எல்லா உயிர்களிடத்தும் தெய்வீகத் தன்மை உள்ளது என்பதை யாண்டும் நினைவில் கொள்ளுக. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற பரவியுள்ள இறைவனை வழிபடுவதே வாழ்வாகும். இந்த வினாடியிலிருந்து ஆன்மீகவாழ்க்கை வாழத் தொடங்குங்கள். உங்கள் வாழ்க்கையில் ஆன்மீக நோக்கு நிறைதல் வேண்டும். நிறை நிலையை அடைதற்கான நேர்வழி இதுவேயாகும். ஆன்மீக வாழ்க்கை மலர்ச்சியடையும்போது இறைவனை நேருக்கு நேர்கண்டு உணரும் பேறு பெறுவீர்கள்.

சாந்தி பேரின்பம், ஞானஒளி ஆகியவற்றை உங்களுக்கு இறைவன் நல்குவானாகுக. நிறை நிலையை நோக்கிய உங்கள் பயணத்தில் முழு வெற்றி ஏற்படுவதாகுக. நமது அறிவுக்கு அறிவாயும் ஆன்மீகப் பேரொளிச் சுடராகவும் திகழும் நமது சற்குரு சிவானந்தரை வாழ்த்தி வணங்குவோமாகுக. குருதேவரின் கீழ்வரும் பாடலை எப்போதும் நினைவில் கொண்டு பாடுவோமாக!

*"கண் விழிக்கையில் கடவுளை நினைப்பீர்*
*கணமும் கருத்தில் கடவுளை நிறைப்பீர்*
*நாள் முழுதும் நாயகனுக்கே தந்து*
*கடவுளை நினைத்தே கண்ணிமை சேர்ப்பீர்"*


**சி.கனகரத்தினம்**
*திவ்ய ஜீவன சங்கத் தலைவர், யாழ்ப்பாணம்.*

---

சங்கானையில் மக்கள் வங்கியின் கிளை ஒன்று கடந்த 4ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. வலிமேற்குப் பிரதேசசபைத் தலைவர் என். திரிலோகநாதன் நாடா வெட்டி வங்கிக் கிளையைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். சங்கானை வர்த்தக சங்கத் தலைவர் எஸ்.நித்தியானந்தன், வர்த்தகர் கா.பரமானந்தன், மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் கிங்ஸ்லி இராசநாயகம் உட்பட வங்கி ஊழியர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.
*படம்:சங்கானைச் செய்தியாளர்*



---

திருவருள் மிகு
அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தான
மணவாளக்கோல மஹா சங்காபிஷேகம்

09.09.2000 சனி மாலை 3.00 மணி பூர்வாங்க கிரியைகள் ஆரம்பம்
10.09.2000 ஞாயிறு காலை 8.00 மணி திரவிய அபிஷேகம்
11.00 மணி மஹா சங்காபிஷேகம்
மாலை 4.00 மணி சமயச் சொற்பொழிவு அதனைத் தொடர்ந்து
பூந்தண்டிகை உற்சவம்
பிரதம குரு:-
சிவாகமப் பிரதிஷ்டா பூபதி
சிவப்பிரம்ம ஸ்ரீ ப.ஜெயக்குமாரக் குருக்கள்
(மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய்)
நாதாஞ்சலி – திரு. R. சிவகுமார் குழுவினர்
- தேவஸ்தானம்

*விழா சிறப்புற வாழ்த்துபவர்:-*
ஆலய கட்டட, சிற்ப, வர்ணக் கலைஞர்,
அராலியூர் ம்ார்க்கண்டு மதியழகன்,
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
(78084)


---

# செய்திக் கொத்து

## இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி

வடமராட்சி,செப்.8

இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ளோர்களுக்கு ஈ.பி.டி.பி.அமைப்பு கப்பி, கயிறு, வாளி போன்ற உபகரணங்களை வழங்கியது.

கற்கோவளம், அத்தாய், பருத்தித்துறை ஆகிய இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கே இவை வழங்கப்பட்டன. (ஐ-173)

## பாடசாலைகளுக்கு தண்ணீர்த்தொட்டி

வலிகாமம்தெற்கு,செப்.8

சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான சைவ அபிவிருத்திப் பணி நிதியத்தில் இருந்து 60 ஆயிரம் ரூபா செலவில் மயிலணி சைவ வித்தியாசாலையின் மாணவர்களின் பாவனைக்கென தண்ணீர்த் தொட்டியொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.(ஐ-152)

## பாடசாலையில் இடம்பெயர்ந்த மக்கள்

கட்டுடை சைவ வித்தியாலயத்தில் இடம்பெயர்ந்த 14 குடும்பங்கள் தங்கியுள்ளன. இதன் காரணமாக இவ் வித்தியாலயம் அயலிலுள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இடம்பெயர்ந்து இயங்கி வருகின்றது.

இதேவேளை -

சர்வதேச 'கெயர்' நிறுவனம் இப்பகுதியில் இடம்பெயர்ந்தவர்களுக்கு குடிசைகளை நிறுவிக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் -

இக்குடிசைகளில் இவ்வித்தியாலயத்தில் தற்போது தங்கியிருப்பவர்களைக் குடியேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (ஐ-135)

## மக்கள் வங்கி கருமபீடம்

சண்டிலிப்பாய்,செப்.8

வலி. தென்மேற்குப் பிரதேச மக்களின் நலன்கருதி யாழ்.ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியின் கருமபீடம் ஒன்று மானிப்பாய்ச் சந்திக்கு அருகில் உள்ள கட்டடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்.ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியில் நடைபெறும் சகல வங்கிச்சேவைகளும் இங்கும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## வேட்பாளருக்கு இலக்கங்கள்

கொழும்பு,செப்.8

பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியல் கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பாளர்களுக்கு இலக்கங்களை வழங்கும் பணியை தேர்தல் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

அகர வரிசைப்படி பெயர்ப்பட்டியல்கள் சீர்செய்யப்பட்டு இலக்கங்கள் வழங்கப்படும். (ஐ-186)

## அஞ்சலிக்கூட்டம்

காரைநகர்,செப்.8

காரைநகர் பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை முன்னாள் அதிபர் மறைந்த அமரர் கந்தையா ஆறுமுகம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபர் ஆ.பாலகிருஷ்ணன் தலைமையில் மேற்படி வித்தியாலய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ஐ-73)

## முகாம்களுக்கு விஜயம்

தென்மராட்சி,செப்.8

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வி.குகேந்திரன் (ஜெகன்), சிவதாசன் ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு விஜயம் செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர்.

இவர்களுடன் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரனும் முகாம்களுக்கு விஜயம் செய்ததாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## மீனவர் மூவர் கைது

நெல்லியடி,செப்.8

ஊரடங்குச்சட்டம் அமுலிலிருந்த நேரம் பார்த்து, கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் மூவர் படையினரால் கைதுசெய்யப்பட்டு, வல்வெட்டித்துறை பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த முதலாம் திகதி வல்வெட்டித்துறை கடற்பரப்பில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டிருந்த பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த பெருமாள் செல்வநாயகம் (வயது 40) கற்கோவளத்தைச் சேர்ந்தவர்களான, சபாபதிப்பிள்ளை கணேசலிங்கம் (வயது 35), கணபதிப்பிள்ளை சிவராசா(வயது 38) ஆகிய மூவரையும் வல்வெட்டித்துறை பொலீஸார் 3ஆம் திகதி காலை பருத்தித்துறை மாவட்ட நீதிவானின் வாசஸ்தலத்தில் ஆஜர் செய்த சமயம் மூவரையும் தலா ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா 5 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்லுமாறு. நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார். (ஐ-109)

## கடையை உடைக்கும் முயற்சி தோல்வி

சுன்னாகம்,செப்.8

சுன்னாகம் நகரப்பகுதி வர்த்தக நிலையமொன்றை நள்ளிரவு வேளை உடைத்துத் திருட மேற்கொண்ட முயற்சியை வர்த்தகர் சங்கப் பாதுகாப்புச் சேவையினர் முறியடித்தனர்.

கடந்த வெள்ளியன்று இரவு 1.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

திருட்டு முயற்சியில்ஈடுபட்டவர்கள் பாதுகாப்புச் சேவையினரைக் கண்டதும் தப்பியோடி விட்டனர். ஊரடங்குச் சட்டம் காரணமாக அவர்களைத் துரத்திப் பிடிக்க முடியாது போய்விட்டதாக வர்த்தகர் சங்கத் தலைவர் இ. மகேசன் தெரிவித்தார்.

கே.கே.எஸ் வீதியில் இயங்கி வரும் 'ராஜா கொம்பிளெக்ஸ்' கடையே இவ்வாறு உடைத்துத் திருட முயற்சிக்கப்பட்டது. இச்சம்பவதினம கடையில் 5லட்ச ரூபா பெறுமதியான பொருள்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தனது பொருள்களைக் காப்பாற்றியமைக்காக, அன்றையதினம் திருட்டை முறியடித்த 4 பாதுகாப்புச் சேவை ஊழியருக்குக் கடை உரிமையாளர் சன்மானத்தினை வழங்கினார். (ஐ-27)

## இலவச நெல் விநியோகம்

சண்டிலிப்பாய்,செப்.8

பட்டினிக்கு எதிரான நிறுவனம் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் உறுப்பினர்களான 60 விவசாயிகளுக்கு காலபோக நெல் விதைப்புக்கான விதைநெல்லினை கடந்த வாரம் இலவசமாக வழங்கியுள்ளது.

ஏ.ரி 353, ஏ.ரி 401 ஆகிய இரு விதைநெல் ரகங்கள் வழங்கப்பட்டதாகவும் -

விரைவில் இவர்களுக்கு இந்த நிறுவனத்தினால் மண்வெட்டி, வாளி, கத்தி போன்ற விவசாய உபகரணங்கள் வழங்கப்படவிருப்பதாகவும் -

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் தலைவர் சி.பொ. வ.ம.க. முதலியார் தெரிவித்தார். (ஐ-135)

## மயானத்தில் சிரமதானம்

அரியாலை,செப்.8

வண்ணை கோம்பையன் மணல் மயானத்தில் மாபெரும் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்கு மயான பரிபாலன சபையினர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சிரமதானப் பணிகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று பரிபாலன சபையின் தலைவர் கலாநிதி கே.குணராசா தெரிவித்தார்.

மயானத்தில் படர்ந்து காணப்படும் பற்றைகள் மற்றும் செடிகள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளன. (ஐ-17)

# 'கோலம் கொண்டோம்!' தெரு வெளி நாடகம்

**பிரதேச செயலக பிரிவு ரீதியாக இடம்பெயர்ந்தோர் முகாம்களில் 'கோலம் கொண்டோம்' என்ற தெரு வெளி நாடகம் தற்போது மேடையேற்றப்பட்டு வருகிறது. அது தொடர்பான சிறு குறிப்பு இது.**

'யுனிசெப்' நிறுவனத்தின் உள நல மேம்பாட்டு செயற்பாடுகளில் கடந்த மூன்றாண்டுகளாக யாழ்ப்பாண அரங்கச் செயற்பாட்டு குழு இணைந்து செயற்பட்டு வருகின்றது. புதிய அரங்க எண்ணக்கருக்களை உள்ளடக்கியதான அரங்கச் செயற்பாடுகளில் விசேட அறிவுடையவர்களாக அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர் உள்ளனர். இவர்களில் இந்தத் திறனின் பிரதிபலிப்பாக 'தெரு வெளி நாடகம்' காணப்படுகின்றது. அண்மையில் கந்தரோடையில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோரின் நலன்புரி முகாமொன்றில் இவர்களின் 'கோலம் கொண்டோம்' என்ற தெரு வெளி நாடகத்தை பார்த்ததனூடாக இதனை அறிந்து கொண்டேன்.

நாடகம் ஆரம்பிப்பதற்கு முன்பு நடிகர்கள் தமது வேட உடைகளுடன் குடியிருப்பின் பாதைகளூடாக தாளவாத்திய இசையுடன் சென்று மக்களை அழைத்துத் தம்முடன் இணைத்துக் கொள்கிறார்கள். ஒரு சிறுவன் நடிகர்களின் தளவாத்தியமொன்றை வாங்கி இசைத்தபடி காணப்பட்டான். சில குடும்பங்கள் நடிகர்களுடன் இணைந்து நாடகம் நடைபெறுவதாக இருந்த மரத்தடிக்கு வந்து சேர்ந்தார்கள். இவ்வாற்றுகையில் ஒரு விடயத்தை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பார்வையாளர்கள் நாடக ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கவனித்தபடியும், சிரித்தபடியும் இருந்தார்கள். சிறியவர்கள், பெரியவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் சிரித்து மகிழ்ந்தார்கள். நாடகம் ஒரு மணிநேரம் நடைபெற்றது. இந்த ஒரு மணி நேரமும் மக்கள் முரண்பாடான புறச்சூழலின் அழுத்தங்களில் இருந்து விடுபட்டு சந்தோஷமாகவும், களிப்பாகவும் இருந்தார்கள். நாடக முடிவில் சிறுவர்கள் நடிகர்களுடன் இணைந்து அரை மணிநேரம் ஆடி மகிழ்ந்தார்கள்.



'கோலம் கொண்டோம்' நாடகத்தில் ஒரு காட்சி

நாடகத்தின் கதை மக்கள் தங்களைச் சூழவுள்ள நிலைமைகள் பற்றிச் சிந்திப்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நாடக ஆற்றுகையின் போது பார்வையாளரான மக்கள், நடிகர்களுடன் விவாதித்துக் கொண்டார்கள். அதேவேளை தமக்குள்ளும் விவாதித்துக் கொண்டார்கள். இந்த உயர்ந்த பெறுபேற்றை நடிகர்களின் நடிப்பினூடாகவே அடைய முடிந்தது. நாடகம் ஆகக் குறைந்தது மக்கள் தமது எதிர் காலம் பற்றிச் சிந்திப்பதை தெளிவாகக் கற்றுக்கொடுக்கின்றது. நான் ஆற்றுகை முடிவில் மக்களுடன் உரையாடினேன். அப்போது அவர்கள் ஆற்றுகையை தாம் பெரிதும் விரும்புவதாக குறிப்பிட்டார்கள். தாம் விவாதித்த விடயங்கள் பற்றிப் பேசினார்கள். அதிகமான மக்கள் தமது குடியிருப்பில் இவ்வாறான ஆற்றுகைகளை தொடர்ச்சியாக ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தற்போதைய நிலைமை பெரியவர்களும், சிறியவர்களும் ஏனையோருடன் இணைந்து மகிழ்வதற்கும் விவாதிப்பதற்கும் எந்தவிதமான சந்தர்ப்பத்தையும் அளிப்பதில்லை என்பது இதற்கு ஒரு காரணமாகும்.

*அ.சிறிஸ்கந்தராஜா*

# கன்னி மரியே தாயே நீ வாழியவே!

உருவிலா இறைவனைக் கருவினில்
தாங்கிய உத்தமியே
சத்தியன் பாதையில் சரித்திரம்
படைத்த நாயகியே
நித்தம் நின் பாதம் தொழுதோர்க்
கில்லைத் துயரே
நினைத்துனை வாழ்த்தி பணிவோம்
நீ அவதரித்த நன்நாளதனில்

ஏவாள் எனும் ஆரணங்கு - ஏதேன்
தோட்ட அழகுக் கனியை
புசித்திடக் கொண்டாள் ஆசை - அந்தோ
புவிக்கு வந்தது அழிவு
ஆரணங்கிவள் ஆசையினால் - அலகை
எழ அகிலம் அழிந்தது
அலகையின் செருக்கழிந்திட - ஆண்டவன்
தந்தான் ஆணை!
'புவி மீட்க பிறப்பான் புனிதன் என்று'

பாவியை தேடிவந்த பரமன் - பாரினிலுதிக்க
பாவையொருத்தி தந்தாள் தன்னை
பணிந்தாள் கன்னிமரி உம் அடிமை நானன்றோ - ஆகட்டும்
உம் சித்தம் என்றாள்
துளிர்த்தது மீட்பு துவண்டது அலகை
கன்னி நின் பிறப்பு கருணையின் வித்தே
அன்னை உன் அன்பு ஆருயிர்க்கும் வாழ்வே
தாழ்ச்சி நீ பூண்டாய் தரணியுயிர்த்தது
அடிமை நான் என்றாய் அகிலம் உயிர்த்தது
போர் முரசு முழங்கும் எம் மண்ணில்
புனிதம் மலர அருளாயோ!

பயணிக்கும் திருச்சபையின் பாதுகாவலியே - எம்
பாதையின் கலங்கரை விளக்கும் நீயன்றோ
பாவியர்க்கும் பரிந்துரைக்கும் தாயே - இப்
பாருலகில் படும் துயர் களையாயோ?

துன்பத்தின் களை தளமாய் - வேத
விசுவாசத்தின் விளை நிலமாய்
சாதனையில் சரித்திரமாய் - திருச்
சபையின் திருத்தூணாய் திகழ், யாழ்
அடைக்கல அன்னை ஆலயப்
பெருநாளாம் இத்திரு நாளதனில்
அவள் பாதம் நாடி
அருள் கோடி பெறுவோம் - நின்
ஆருயிர் நேச மைந்தன் ஆசியை அடைந்து
மாசின்றி வாழ்ந்திட அனுக்கிரகம் புரிவாய்!

பூவிலிங்கம் – ஜெயவதனி,
ஓ.எல்.ஆர்.

# வயோதிபரின் சடலம் சாவகச்சேரியில் அடக்கம்

வவுனியா,செப்.8

சாவகச்சேரிப் பகுதியில் அநாதரவான நிலையில் கிடந்த வயோதிபர் ஒருவரின் சடலம் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சாவகச்சேரி மேற்கைச் சேர்ந்த வி.சோமசுந்தரம் (வயது 81) என்பவரே அவரது வீட்டில் அநாதரவான நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டவர் ஆவார்.

இதே வேளை-

கடந்த 3ஆம் திகதி நுணாவிலில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் உயிரிழந்த நுணாவில் மேற்கைச் சேர்ந்த சண்முகம் கார்த்திகேசு (வயது 70), சின்னாண்டி கோபால் (வயது 67) ஆகியோரது சடலங்களும் அடக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

# சரணாகதி என்ற நிலைமை இலகுவில் அமையக் கூடியதா?

## ஆன்மீக சாதனை அதற்கு அவசியம்

நாம் நமது உள்ளத்தை எப்பொழுதும் இறைவனுடன் தொடர்பு கொண்டுள்ள மிகவும் உயர்ந்த ஒரு மேலான நிலையில் வைத்திருக்க வேண்டும்.

இவ்விதம் தொடர்புகொள்வதற்கு பக்தி, தொண்டு, தியானம் போன்ற பல வழிகள் உள்ளன. இவற்றுள் ஏதாவது ஒரு வழியை நாம் பின்பற்றி 'நான்', 'எனது' என்பதை மறந்து கடவுள் நினைவுடனேயே வாழ முற்பட வேண்டும்.

அதிகமாக பக்தி செலுத்தச் செலுத்த, அதிகமாக தியானம் செய்யச் செய்ய, நம்மைப் பற்றிய எண்ணங்கள் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கி இறைவனைப் பற்றிய சிந்தனை நம்மை முழுவதும் ஆட்கொள்ளத் தொடங்குகிறது.

ஆனால் நம்மால் எல்லா நேரத்திலும் தியானம் செய்துகொண்டிருக்க முடியுமா என்ன? முடியாது.

ஆதலால் மற்ற நேரங்களில் நாம் நம்மை உபயோகமான சேவைகளில் ஈடுபடுத்திக் கொள்வதே நல்லது.

**ஞானக்கதிர்**

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இறைவன் வீற்றிருக்கின்றான் என்று உணர்ந்து, மனிதனுக்கு தொண்டு செய்யவேண்டும். ஏன் வீட்டில் இருப்பவர்களும் - அவர்களும் இறைவனின் வடிவங்களே என்று நினைத்து - அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

இவ்விதம் நாம் இறை நினைவுடனேயே முழுக்க முழுக்கத் தொண்டில் இறங்கினோமானால் அதன் மூலம் நாம் இறைவனைப் பற்றி நினைத்தபடியே இருப்போம். ஆனால் நாம் நம் மனதை மட்டுமே உலக இன்பங்கள் பற்றி நினைக்க விடாமல், அதை விழிப்புடன் காப்பாற்ற வேண்டும். உலக சம்பந்தமான விஷயங்களைப் பற்றி நினைக்க மனத்திற்கு நாம் நேரமோ சந்தர்ப்பமோ அளிக்கவேகூடாது.

இறைவழிபாட்டிலோ அல்லது இறைவனுக்குரிய தொண்டிலோ நாம் நம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தோமானால் நமது மனமும் இறைவனைப் பற்றி நினைத்தபடியே இருக்கும். அது காரணமாக இறைவனிடமிருந்து நாம் பிரிந்திருக்கிறோம் என்ற உணர்வே நமக்கு ஏற்படாது.

இதுவரை கூறியதிலிருந்து ஆன்மீகப் பயிற்சி என்பது பல வருடாங்கள் தொடர்ந்து நடத்த வேண்டியதொன்று என்பதை நாம் அறியலாம். அதில் சில சமயம் தோல்விகளையும் காணலாம். அதற்கும் நாம் தயாராகவே இருக்கவேண்டும்.

எல்லையற்ற பொறுமையோடும் விடா முயற்சியோடும் திட நம்பிக்கையோடும் நாம் நமது ஆன்மீக இலட்சியத்தை நோக்கி முன்னேற வேண்டும்.

தோல்விகள் நமது உள்ளத்தில் எந்தவகைத் தளர்ச்சியையும் ஏற்படுத்த இடம் கொடுக்கக்கூடாது.

இறைஞானம் பெற முடியும் என்ற நம்பிக்கை தான் மிகவும் அவசியம். அந்த நம்பிக்கையோடு முயற்சி செய்வோமானால் நாம் வெற்றியடையப் போவது நிச்சயம்.

சரணாகதியின் மூலம் இறைவனை அறியலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். இது உண்மையாக இருந்த போதிலும் சரணாகதி என்ற நிலை அவ்வளவு சுலபமாக நாம் அடையக் கூடிய ஒன்றல்ல.

'நான்', 'எனது' என்ற எண்ணங்கள் நம்முள் இருக்கும்போது அகங்காரம் என்ற பேய் நம்மைப் பிடித்து ஆட்டும்போது முழுச்சரணாகதி என்பது ஏற்படவே ஏற்படாது.

ஆன்மீகச் சாதனையில் நமது முயற்சிகள் அனைத்தும் முடிவடைந்து நாம் சோர்வடைந்து திறமையற்று நிற்கும் நேரத்தில்தான் கடவுளின் கருணை நம்மீது இறங்கும். நாம் நம்மால் இயன்றளவு நன்கு முயற்சி செய்து, ஆன்மீகச் சாதனைகளின் முடிவை அடைந்து, இனிமேலும் ஒன்றும் செய்ய இயலாது என்ற நிலைக்கு வரும் போது தான் இறைவனின் கருணை நமக்குக் கிட்டுகிறது.



சுவாமி வீரேஸ்வரானந்தர்

இனியும் ஏன் தயக்கம்? இதோ, இப்போதே இந்த நிமிடமே இறைவனை அறிய நாம் சாதனைகளைத் தொடங்குவோம்.

மனிதப் பிறவியின் மூலமே நாம் இறைஞானம் பெற முடியும். இதோ மனிதர்களாகப் பிறந்திருக்கிறோம். மனிதப்பிறவி கிடைப்பதே மிகவும் அரிது. இறைஞானம் பெறுவது ஒன்றே ஒன்றுதான் மனித வாழ்க்கையின் ஒரே லட்சியம். அதை நாம் தெளிவாக உணர்ந்து செயலில் இறங்குவோம்.

இறைஞானம் பெற எந்தவிதத் தியாகமும் செய்யத் தயாராக இருப்போம். தடைகளை தகர்த்தெறிவோம். இறைஞானம் பெறாத வாழ்க்கை பயனற்றது என்பதை நாம் உணர்ந்தோமானால் அதுவே நாம் பாதி வழியைக் கடந்தது போல் ஆகும். மற்றவை தானாகவே மிகவும் எளிதாக அமைந்துவிடும்.

ஆகவே நாம் நல்லது கெட்டதை விவேகத்தினால் சரியாகப் புரிந்துகொண்டு வாழ்க்கையின் இலட்சியத்தை உணர்ந்து ஆன்மீகப் பாதையை அறிந்து அதன் வழியே நடக்க வேண்டும்.

அதிர்ஷ்டவசமாக, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இப்போது நமக்காக அனைத்தையும் செய்து வைத்திருக்கிறார்! அவர் காட்டியுள்ள வழியை நாம் பின்பற்றினோமானால், நாம் செய்ய வேண்டியவை மிகச் சொற்பமாகவே அமைந்து விடும்.

எனவே இறைவனை அறிய நாம் இந்த வாழ்க்கையிலேயே முற்படுவோம். முற்பட்டு ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஆசியால் நமது இலட்சியத்தையும் நாம் அடைவோமாக!

*(சுவாமி வீரேஸ்வரானந்தர் திருவனந்தபுரம் ஸ்ரீராமகிருஷ்ண ஆச்சிரமத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதி)*

# முன் பள்ளி பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.8


மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் நடத்தப்படும் விநாயகர் முன்பள்ளி பாடசாலையின் விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இப்பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்தி கூ. சங்கத்தின் தலைவர் ஆரியகுட்டி சின்னத்துரை தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக பனை அபிவிருத்திச் சபைப் பொது முகாமையாளர் சோ.கோ.குலதாசனும் கௌரவவிருந்தினராக கட்டுடை சைவ வித்தியாசாலை அதிபர் கடவுள் சுப்பிரமணியமும் கலந்து கொள்வர். (க)


## நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்

★ போரை நிறுத்தி புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினையைத் தீருங்கள்!

★ எமது மக்களை வாழ விடுங்கள் என்பதை நாடாளுமன்றத்திலும் உலக அரங்கிலும் நேர்மையுடனும், நெஞ்சுரத்துடனும் வலியுறுத்த சட்டத்தரணி நல்லதம்பி சிறீகாந்தா தலைமையில் போட்டியிடும் சுயேச்சைக் குழு இல: 6ஐ ஆதரியுங்கள்.



(C/12837)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 7ஆம், திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

| | |
|---|---|
| 513/134848/A | 513/134848/B |
| 513/134848/C | 513/134848/D |
| 513/139793/A | 513/139793/B |
| 513/139793/C | 513/139793/D |
| 513/146302/A | 513/146302/B |
| 513/146302/C | 513/152043/A |
| 513/152043/B | 513/152043/C |
| 513/152043/D | 513/152043/E |
| 513/152127/A | 513/152127/B |
| 513/152127/C | 513/155090/A |
| 513/155090/B | 513/155152/A |
| 513/155152/B | 513/155168/A |
| 513/155168/B | 513/155168/C |
| 513/155168/D | 513/155248/A |
| 513/155248/B | 513/155248/C |
| 513/155249/A | 513/155250/A |
| 513/155335/A | 513/155449/A |
| 513/155449/B | 513/156037/A |
| 513/157690/B | 513/157741/A |
| 513/157741/B | 513/157907/A |
| 513/157907/B | 513/157933/A |
| 513/157942/A | 513/157979/A |
| 513/157981/A | 513/157981/B |
| 513/157981/C | 513/157981/D |
| 513/158548/A | 513/158548/B |
| 513/158552/A | 513/158615/A |
| 513/158702/A | 513/158702/B |
| 513/158759/A | 513/158759/B |
| 513/158773/A | 513/158816/A |
| 513/158816/B | 513/158816/C |
| 513/158816/D | 513/158861/A |
| 513/158861/B | 513/158861/C |
| 513/158862/A | 513/158885/A |
| 513/158910/A | 513/158946/A |
| 513/158946/B | 513/158954/A |
| 513/158954/B | 513/158954/C |
| 513/158954/D | 513/158954/E |
| 513/158960/A | 513/158960/B |
| 513/158973/A | 513/158977/A |
| 513/158977/B | 513/160712/A |
| 513/160712/B | 513/160712/C |
| 513/160713/A | 513/160851/A |
| 513/160876/A | 513/160880/A |
| 513/160899/A | 513/160899/B |
| 513/160899/C | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 513/147246/A | 513/150414/A |
| 513/150414/B | 513/150414/C |
| 513/151814/B | 513/151841/A |
| 513/151841/C | 513/152117/A |
| 513/155251/A | 513/155466/A |
| 513/155466/B | 513/155466/C |
| 513/155466/D | 513/157729/A |
| 513/157729/B | 513/157776/A |
| 513/157776/B | 513/157776/C |
| 513/157776/D | 513/157784/A |
| 513/157784/B | 513/157784/C |
| 513/157843/A | 513/157843/B |
| 513/157843/C | 513/157866/A |
| 513/157866/B | 513/158489/A |
| 513/158489/B | 513/158804/A |
| 513/158804/B | 513/158804/C |
| 513/158856/A | 513/158856/B |
| 513/158856/C | 513/158856/D |
| 513/158871/A | 513/158880/A |
| 513/158880/B | 513/158880/C |
| 513/158880/D | 513/158880/E |
| 513/158880/F | 513/158903/A |
| 513/158903/B | 513/158945/A |
| 513/158945/B | 513/158955/A |

**SANDILIPAY**

| | |
|---|---|
| 513/131703/A | 513/147266/A |
| 513/147266/B | 513/148270/A |
| 513/148277/A | 513/151820/A |
| 513/152183/A | 513/152242/A |
| 513/152242/B | 513/152246/A |
| 513/152246/B | 513/152246/C |
| 513/152249/B | 513/152249/C |
| 513/152249/D | 513/155284/A |
| 513/155292/A | 513/155443/A |
| 513/155443/B | 513/155443/C |
| 513/155460/A | 513/155461/A |
| 513/155491/A | 513/156004/A |
| 513/156060/A | 513/156070/A |
| 513/157266/C | 513/157266/D |
| 513/157690/A | 513/157695/A |
| 513/157695/B | 513/157706/A |
| 513/157722/A | 513/157722/B |
| 513/157722/C | 513/157725/B |
| 513/157725/C | 513/157725/D |
| 513/157725/E | 513/157725/F |
| 513/157742/A | 513/157742/B |
| 513/157757/A | 513/157757/B |
| 513/157757/C | 513/157759/A |
| 513/157759/B | 513/157759/C |
| 513/157760/A | 513/157779/A |
| 513/157779/B | 513/157823/A |
| 513/157834/A | 513/157858/A |
| 513/157858/B | 513/157864/A |
| 513/157886/A | 513/157908/A |
| 513/157966/A | 513/157966/B |
| 513/157967/A | 513/157974/A |
| 513/158620/A | 513/158620/B |
| 513/158620/C | 513/158620/D |
| 513/158620/E | 513/158620/F |
| 513/158637/A | 513/158685/A |
| 513/158719/A | 513/158719/B |
| 513/158722/A | 513/158722/B |
| 513/158722/C | 513/158722/D |
| 513/158722/E | 513/158832/A |
| 513/158832/B | 513/158836/A |
| 513/158836/B | 513/158842/A |
| 513/158842/B | 513/158870/A |
| 513/158890/A | 513/158890/B |
| 513/158890/C | 513/158898/A |
| 513/158916/A | 513/158918/A |
| 513/158918/B | 513/158918/C |
| 513/158919/A | 513/158919/B |
| 513/158919/C | 513/158959/A |
| 513/160706/A | 513/160706/B |
| 513/160707/A | 513/160715/A |
| 513/160715/B | 513/160736/A |
| 513/160819/A | 513/160819/B |
| 513/160819/C | 513/160823/A |
| 513/160823/B | 513/160892/A |
| 513/157751/A | 513/157751/B |
| 513/157815/A | 513/157815/B |
| 513/158731/A | 513/158731/B |
| 513/158731/C | 513/158731/D |
| 513/158923/A | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 513/151976/A | 513/151976/B |
| 513/152058/A | 513/152058/B |
| 513/152113/A | 513/152123/A |
| 513/152123/B | 513/155351/A |
| 513/155366/A | 513/155366/B |
| 513/155423/A | 513/155430/A |
| 513/155430/B | 513/156051/A |
| 513/156051/B | 513/156051/C |
| 513/156051/D | 513/156068/A |
| 513/157819/A | 513/157819/B |
| 513/157909/A | 513/157909/B |
| 513/157909/C | 513/157909/D |
| 513/157923/A | 513/157923/B |
| 513/157923/C | 513/157928/A |
| 513/157952/A | 513/157952/B |
| 513/158838/A | 513/158838/B |
| 513/158838/C | 513/158924/A |
| 513/158978/A | 513/160830/A |
| 513/160830/B | |

**உடுவில்**

| | |
|---|---|
| 513/147036/A | 513/147036/B |
| 513/147378/A | 513/152030/A |
| 513/152155/A | 513/152155/B |
| 513/152155/C | 513/152155/D |
| 513/152155/E | 513/152155/F |
| 513/152178/A | 513/152228/A |
| 513/155245/A | 513/155245/B |
| 513/155245/D | 513/155245/E |
| 513/155245/F | 513/155245/G |
| 513/155368/A | 513/155490/A |
| 513/155490/B | 513/156048/B |
| 513/156048/C | 513/157693/A |
| 513/157693/B | 513/157748/A |
| 513/157748/B | 513/157748/C |
| 513/157769/A | 513/157769/B |
| 513/157801/A | 513/157801/B |
| 513/157841/A | 513/157875/A |
| 513/157875/B | 513/157913/A |
| 513/157913/B | 513/157913/C |
| 513/157918/A | 513/157953/A |
| 513/157953/B | 513/157953/C |
| 513/157953/D | 513/158647/A |
| 513/158782/A | 513/158808/A |
| 513/158808/B | 513/158808/C |
| 513/158824/A | 513/158837/A |
| 513/158837/B | 513/158923/A |
| 513/158948/A | 513/158956/A |
| 513/158961/A | 513/158962/A |
| 513/156048/A | 513/157832/B |

# ஆயுதங்களை மீளப்பெற வேண்டும்

கொழும்பு,செப்.8

அமைச்சர்கள் மற்றும் வேட்பாளர்களிடம் உள்ள ஆயுதங்களை மீளப் பெறவேண்டும் என ஐ.தே. கட்சி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கோரியுள்ளது.

அக்கரைப்பற்றில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் இருவர் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களால் கொலை செய்யப்பட்டதை அடுத்தே இந்த அவசர வேண்கோள் விடுக்கப்பட்டதாக ஐ.தே.கவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டிலேயே கொடித்துவக்கு இதனைத் தெரிவித்தார்.

வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்குக் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் அதற்கு ஜனாதிபதியே பொறுப்பு என்றே ஐ.தே.க. கருதும் என அனுரா பண்டாரநாயக்கா அங்கு தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸிடம் 5 ஆயிரம் ஆயுதங்கள் இருப்பதாக ஐ.தே.கவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கூறினார். (க)

### எமது உயிருக்கு நாமே பொறுப்பு; நஷ்டஈடு வேண்டாம்!

# படையினரின் உறவினர்கள் வன்னி புறப்பட முன்னர் சத்தியக்கடதாசி!

கொழும்பு,செப்.8

வடக்கு - கிழக்கு யுத்தத்தின் போது காணாமல் போன படையினர் மற்றும் சிவிலியன்களின் உறவினர்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று திரும்புவது தொடர்பாக சத்தியக்கடதாசி ஒன்றை பாதுகாப்பு அமைச்சுக்குக் கையளிப்பதற்கு முடிவு செய்துள்ளனர்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனோ அனுமதியின்றியோ வன்னிப் பிரதேசத்திற்குச் செல்லும் உறவினர்களோடு கிறிஸ்தவ மதகுருமார்களும் இணைந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

புலிகள் இயக்கத்தினரின் தடுப்புக்காவலில் இருக்கும் படைவீரர்களையும் சிவிலியன்களையும் பார்வையிடுவதற்காக அவர்களது உறவினர்கள் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று திரும்புவது குறித்துத் தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதற்காக மேற்படி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு கொழும்பில் கூடியது.

இக்கூட்டத்தின் போதே பாதுகாப்பு அமைச்சுக்கு மேற்படி சத்தியக் கடதாசியைக் கையளிப்பதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக சங்கத் தலைவர் ஈ.பி.நாணயக்கார தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்திற்குள் பிரவேசிக்கும் எமது உயிர், உடல் பாதுகாப்புக்கு நாமே பொறுப்பானவர்கள். இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் எமது உயிர், உடலுக்கு ஏதாவது இழப்புகளோ, பாதிப்புகளோ ஏற்பட்டால் நாம் அவற்றுக்கு அரசாங்கத்திடம் நஷ்டஈடு எதனையுமே கோர மாட்டோம்.

இதனை இத்தால உறுதிப்படுத்துகிறோம்.

ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எமக்கு அரசாங்கமே பூரண பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று சத்தியக்கடதாசியில் குறிப்பிடப்படும் என நாணயக்கார கூறினார். (ஐ-6)

# ஐ.தே.கவின் ஊர்வலம் மீது பொலீஸார் கண்ணீர்ப் புகை!

பொலநறுவையில் ஐ.தே.கவின் ஊர்வலமொன்றைக் கலைப்பதற்குப் பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். ஊர்வலத்தில் சென்றோர் பொலீஸாரைத் திருப்பித் தாக்கியதில் இன்ஸ்பெக்டர் ஒருவரும் இருகான்ஸ்டபிள்களும் காயமடைந்தனர்.

ஐ.தே.கவின் மாவட்ட வேட்பாளர்கள் தலைமையில் 2ஆயிரம் ஆதரவாளர்களையும் ஐநூறு வாகனங்களையும் கொண்ட ஊர்வலம் ஹிங்குராங்கொடையில் இருந்து பொலநறுவை நோக்கிச் சென்று கொண்டிந்தது. கத்தமுன என்னுமிடத்தில் வைத்து இவ்வூர்வலத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கான முயற்சியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் ஈடுபட்டிருந்ததாக பொலீஸாருக்குத் தகவல் கிடைத்ததைத தொடர்ந்து இவ்வூர்வலத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு பொலீஸார் முயன்ற போதே மேற்படி குழப்பம் ஏற்பட்டதாகப் பொலநறுவை மூத்த பொலீஸ் அதிகாரி நிசங்க வெகொடபொல தெரிவித்ததாக கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.


ஓம்

விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## பூப்பு மங்கள திருமஞ்சன் நீராட்டு விழா

## அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணித் திங்கள் 25ஆம்நாள்(10--09-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 7.24 மணி முதல் 8.20 மணிவரையில் வரும் கன்னிலக்கின சுப முகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி

திருவளர் செல்வி

**ஹஜரூபா (HAJAROOBA) அவர்களுக்கு**

பூப்பு மங்கள திருமஞ்சள் நீராட்டு விழா நடத்தப் பெற்றோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்பான வரவை நாடும்:

திரு. இராசரத்தினம் ஞானகோபால்
(லங்கா சிமெந்து நிறுவனம்)
திருமதி ஞானகோபால் சுகன்யா
(சாந்தி ரீச்சர் - யா/இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை)
திரு. திருமதி இராஜநாயகம் தங்கபூபதி

அன்புடன் வரவேற்பவர்:
ஞா. பஜனீதா (அன்புத் தங்கை)
*645, கே. கே. எஸ். றோட்,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

-(78110)



உ


*சிவமயம்*

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆவணி மாதம் 25 ஆம் நாள் (09.09.2000) சனிக்கிழமை துவாதசித் திதியும் உத்தராட நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய மாலை 7.15 மணி முதல் 8.30 மணிவரையுள்ள மீனலக்கின சுப வேளையில்

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**உதயகுமார்**
அவர்களுக்கும்




எமது புதல்வி
திருநிறை செல்வி
**யசோதா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு இல.49, பிரெட்றிகா றோட், வெள்ளவத்தையில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை வாழ்த்தி அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி கிருஷ்ணசாமி தம்பதிகள்
சங்கத்தானை, சாவகச்சேரி.
72/1, பெனிக் குயிக் றோட்,
கொழும்பு - 6.
01-585961

திரு.திருமதி இந்திரராசா தம்பதிகள்
மந்துவில் மேற்கு, கொடிகாமம்.
72/1, பெனிக்குயிக் றோட்,
கொழும்பு - 6.

திரு.கி.உதயகுமார்
316, HIGH ROAD,
WILLESDEN
LONDON NW102EN

இரு வீட்டார்
அழைப்பு

திரு.இ.இராஜதிலகன்
HIGHAN ROAD,
TOCTENHAM.
LONDON N176NE

(C/12818)

# சந்நிதியான் ஆலய உற்சவ நிகழ்ச்சிகள்

கொழும்புத்துறை, செப். 8
தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவத்தைமுன்னிட்டுச் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் விசேட நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை 'கழலுடன்சேர்த்தென்னைக் காத்தருள்வாய்' என்ற தலைப்பில் ஆ. சிவநாதன் வழங்கும் சொற்பொழிவும்—

நாளை சனிக்கிழமை 'அலங்கார அமிர்தம்' எனும் பொருளில் சிவத்திரு. வ. குமாரசாமி நிகழ்த்தும் சொற்பொழிவும்—

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 'அறிஞரின மிக்கான்' எனும் பொருளில் ச. விநாயகமூர்த்தி நிகழ்த்தும் சொற்பொழிவும்—

இடம்பெறவுள்ளன.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 1940 — 09 — 26

மறைவு 2000 — 08 — 09

### அமரர் ஞானசுந்தரம் சிவசுந்தரம்

எங்கள் அன்புக்குரிய ஞானசுந்தரம் சிவசுந்தரம் அவர்களின் மறைவு கேட்டு பல வழிகளிலும் உதவியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியோருக்கும், நேரிலும், கடிதங்கள், தந்திகள், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு —

இன்று (8-9-2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி மகேஸ்வரி ஞானசுந்தரம்,
(தாய்)
குடும்பத்தினர்.

441, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (78023)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி தம்பித்துரை தேவி

மலர்வு 05 - 10 - 1955
உதிர்வு 09 - 08 - 2000

மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்
அம்மா உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சத்தை விட்டு நீங்காது!

இன்று( 08 - 09 - 2000 ) வெள்ளிக்கிழமை காலை 9. 00 மணியளவில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் - தம்பித்துரை,
பிள்ளைகள் - சங்கர்,
ராஜன், ரதீஸ்.

7 ஆம் ஒழுங்கை, முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (77906)

# தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், செப். 8
பருத்தித்துறைக்கு நேற்று முன்தினம் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 106 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 50 தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபால்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

யாழ். பிரதம தபாலகம் தவிர்ந்த வேறு சில தபால் நிலையங்களுக்கு சாதாரண முத்திரைகளும் எடுத்து வரப்பட்டதாக அவர் தெரிவித்தார். (ஐ-10)

# திறப்பு விழா

வலிகாமம்தெற்கு, செப்.8
புனர்வாழ்வு மீள்குடியமர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டநிதி உதவியுடன் 15 லட்சம் ரூபா செலவில் வலிகாமம் பிரதேச செயலக கிராமிய சுகாதாரத் திட்ட அடிப்படையில் உடுவில் ஆலடிப்பகுதியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மத்திய மருந்தகம் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 30 மணிக்கு உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட உள்ளது.

மத்திய மருந்தக அபிவிருத்திச் சபையினரின் ஏற்பாட்டில் லயன். எஸ். ஜே. செல்வராசா தலைமையில் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் மருந்தகத்தைத் திறந்து வைப்பார்.

சமூகஜோதி கா. கணேசதாசன், அருட்திரு. எஸ். சி. ஆனல்ட் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

யாழ். சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி உமா சிவபாதசுந்தரம்,ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட பிரதிநிதி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் இதில் கலந்துகொள்வர். (க-152)

# கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, செப். 8
வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் தரம் 5 ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான சேவைக் காலப்பயிற்சிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் கோட்டரீதியாக நடைபெற உள்ளன.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் சண்டிலிப்பாய், சங்கானைக் கோட்ட ஆசிரியர்களுக்கும்—

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் உடுவில், தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கும் கருத்தரங்கு நடைபெறும்.

கருத்தரங்கில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் கத்தரிக்கோல், நூல், பிளேட், சுர்க்கு, வண்ணக்கடதாசி என்பவற்றைக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-152)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, செப் 8
வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சிசம்பந்தமான சேவைக் கால பயிற்சிக் கருத்தரங்கும் செயலமர்வும் நாளை சனிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில்நடைபெற உள்ளது

உடற்கல்விக்குப் பொறுப்பான ஆசிரியர், உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர் ஆகியோரை இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்வி முகாமைத்துவ உதவிக் கல்விப் பணிப்பாளர் க. சுந்தரசிவம் கேட்டுள்ளார்.(க-152)

# கொழும்பில் தமிழ்த்திரைப்பட விழா

கொழும்பு, செப் 8
இலங்கையில் முதல் தடவையாக தமிழ்த் திரைப்பட விழா எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்திய தூதரகத்தின் அனுசரணையுடன் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

ஐம்பது வருடங்களுக்கு முன் தயாரிக்கப்பட்ட சிந்தாமணி, மங்கம்மா சபதம், வேலைக்காரி, மந்திரிகுமாரி, அபூர்வ சகோதரிகள், சந்திரலேகா ஆகிய படங்கள் இந்த விழாவில் திரையிடப்படவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை கொழும்பு எல்பின்ன் திரை அரங்கிலும் —

எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் கொழும்பு றீகல் திரையரங்கிலும் —

எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 3 ஆம் திகதி வரை கண்டி றீகல் திரையரங்கிலும் — இந்தப் படங்கள் திரையிடப்படவுள்ளன. (க-3)

# பாடசாலைகள் இணைப்பு

தென்மராட்சி, செப். 8
தென்ராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் கடந்த திங்கட்கிழமை முதல் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியுடன் இணைந்த பாடசாலையாக இயங்கி வருகிறது—

இதே வேளை —

எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கிளாலி றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை கரணவாய் பொன்னம்பலம் மகா வித்தியாலயத்துடன் இணைந்து செயல்படவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (க-117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 11 — 03 — 1919

உதிர்வு 09 — 08 — 2000

### அமரர் அருளப்பு மரியாம்பிள்ளை
(இளைப்பாறிய அதிபர்)

எம் செல்வ ஐயாவே!
ஆண்டு பல சென்றாலும்
மாண்டிடுமோ உம் உருவம்
மீண்டும் உம்மைக் காண்பதெப்போ?
வேண்டுகின்றோம் அமலன் அடி.

எம் ஐயா நீர் இருக்கும் இடம்
நாம் வந்து சேரும் வரை
தேவன் எம்மைக் காத்திடவும்—உமக்கு
அமைதி வரம் அளித்திடவும்— வரம் கேட்டு
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி அன்பான
தேவன் அடி பணிந்து நிற்கும்:

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

G. J. தனசிங்கம்,
859/24, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (78128)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 — 08 — 1924

உதிர்வு 06 — 09 — 1992

### திருமதி தவமணி சிவகுருநாதன்
திதி: 08—09—2000

அன்பும் பண்பும் உள்ள அன்புத் தெய்வமே!
எட்டு ஆண்டுகள் சென்றாலும்
உங்களை ஒவ்வொரு கணமும் நினைத்து உருகும்

அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (78019)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சரவணமுத்து தம்பிரான் என்பவருடைய தே.அ.அ. (340470010v), ஓய்வூதிய அ.அட்டை, காசோலைப் புத்தகம் (இலங்கை வங்கி), நிவாரண அட்டை, குடும்பப்பதிவுப் பத்திரம் மற்றும் பல ஆவணங்கள் கைப்பையுடன் உரும்பிராய் தெற்கு வாசிகசாலையில் கை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உரும்பிராய் J/265 கிராம சேவையாளர் அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (78093)

## மணமகள் தேவை

யாழ். இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் தமது 5' 5'' சிவந்த 30 வயதுடைய Lecturer (University) மகனுக்கு 25 வயதுக்குட்பட்ட அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். சாதகம் (கிரகபாவம் குறைவு) விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். (விள. இல.1092) மேற்பார்த்து உதயன், யாழ்ப்பாணம். (78099)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் 37 வயதுடைய 5'4'' சிவந்த அழகிய Hospital Pharmacyst ஆகவுள்ள மகளுக்குத் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர். சாதகம் விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். (விளம்பர இல.1093) மேற்பார்த்து உதயன், யாழ்ப்பாணம்.

(78098)

## GENERAL ENGLISH CLASSES

General English Classes Conducted. Contact:- K.Uma Suthan, 112, Palaly Road, Near Jaffna Campus Junction.

(78054)

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள கிளாசியோ உஷா 80 குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு:- 300/1, கோயில் வீதி, நல்லூர். (78102)

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாக மூன்று பரப்புகளுடன் கூடிய சகல வசதிகள் கொண்ட பெரிய வீடு (செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலையத்துக்குட்பட்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு:- வே.செல்வரத்தினம். ஆஸ்பத்திரி முன்வீதி, புலோலி. (78045)

Panasonic C.D Player (SL.VS 504) Video, Audio, Akat Amplifier 140w + 140w (Am-m 459) Keson Box 130w + 130w (XL-L 310/312) Sony T.V '20' '20' Sriram ஜெனரேட்டர் 650w ஆகியன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பிற்கு:- சுனில், 272, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(C/12825)

8 மாதம் நிரம்பிய சுத்த இன சணல் கடாய் விற்பனைக்கு உண்டு. இனவிருத்திக்கு உகந்தது. தொடர்புகளுக்கு:- செல்வம், 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (78076)

Sony கலர் T.V - 21 இஞ்சி, தையல் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. லதன் றோய், நந்தாவில் லேன், தாவடி, கொக்குவில். (78116)

## உடன் விற்பனைக்கு

6 ஸ்ரீ 5656 இலக்கம் கொண்ட ஓடக்கூடிய நிலையில் உள்ள MORRIS OXFORD காரும், ரியூட்டரித் தளபாடங்களும், வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சம்பியன் லேன், கொக்குவில். (K.K.S வீதிப் பக்கத்திலிருந்து 3ஆம் வீடு)

(78015)

## இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியை
செல்வி தனலட்சுமி இராமலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி இராமலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
(ஆசிரிய வட்டம்) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (78118)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 1946 - 01 - 09



மறைவு 2000 - 08 - 09

### அமரர் சுப்பிரமணியம் சின்னராசா

பாசத்தோடு எமை அணைத்து
நல்வழி காட்டிய அப்பாவே!
நாள்கள் ஊர்ந்து மாதமாயிற்று!
ஆயினும் உங்களை எங்களால்
மறக்க முடியவில்லையே!

இன்று (2000-09-08) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அமரர் சுப்பிரமணியம் சின்னராசா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.
மீசாலை கிழக்கு, மீசாலை.

தற்காலிக முகவரி:-
*மூத்தவிநாயகர் கோவிலடி,*
*கரணவாய்.*

(77802)

## கட்டடத்துக்கு அடிக்கல்

வட்டு. இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்படவுள்ள புதிய மேல் மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று வெள்ளி காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெறும்.

கட்டடத்தின் அடிக்கல்லை முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.குகேந்திரன் (ஜெகன்) நடுகை செய்வார்.

இந்த நிகழ்வில் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஐ-180)

## மரக்கறி விதைகள் விநியோகம்

சில்லாலை விவசாய சம்மேளத்தின் 30 உறுப்பினர்களுக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் மேட்டு நில பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான மரக்கறி விதைகளை வழங்கியுள்ளது. பயறு, பாகல், புடோல்,வெண்டி, பூசிணி, போஞ்சி ஆகிய பல்வேறு மரக்கறி விதைகளும் மண்வெட்டியும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சம்மேளனத் தலைவர் தெரிவித்தார்.

## தையல் பயிற்சி

அடிப்படையிலிருந்தான
உடையமைத்தல்
வகுப்பு

ஆரம்பம்:
வெள்ளி, சனி, ஞாயிறு
3.00 மணி

**தூரிகை**

ம.ம. வீ. வீதி,
நெல்லியடி (78130)

## சயன்ஸ் அக்கடமி

நல்லூர்

சகல வகுப்புகளும்
வழமை போல்!!

வணிகக் கல்வி
திரு.S.யசோதரன்

A/L 2001
சனி,ஞாயிறு 4.00 -5.30p.m
*"தொழிலாளர்*
*தொழில்கொள்வோன்*
*தொடர்புகள்"*

A/L 2002
சனி, ஞாயிறு 3 - 4p.m
*"தொடர்பாடல்"*
புதிய அனுமதிகளை
உடன் பெறவும். (78107)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு

வெளிவாரிப் பரீட்சை

**வணிகமாணித் தேர்வு, பகுதி 1,1999.**

மேற்படி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 15 இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு அலுவலகத்தில் 2000.09.22 (வெள்ளிக்கிழமை) திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேற்படி தேர்வு ஒக்ரோபர் மாதமளவில் ஆரம்பமாகவுள்ளது.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்

06.09.2000 (C/12846)

## காரைநகர் சிவன் கோயில் திருப்பணிச் சபை

# ஆண்டுப் பொதுக் கூட்டம்

காரைநகர் சிவன் கோயில் திருப்பணிச் சபையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் காரைநகர் சிவன் கோயில் வசந்த மண்டபத்தில் நிகழும் விக்கிரம வருடம் ஆவணித் திங்கள் 24ஆம் நாள் (நாளை) சனிக்கிழமை (09-09-2000) பிற்பகல் 3.00 மணிக்கு சபைத் தலைவர் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் மேற்படி சபை அங்கத்தவர்கள் யாவரையும் கூட்டத்திற்கு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

1. கடவுள் வணக்கம்
2. புதிய அங்கத்தவர்களை அங்கீகரித்தல்
3. தலைவர் உரை
4. 25.12.1999 ஆம் திகதி ஆண்டுக் கூட்டறிக்கை சமர்ப்பித்தல்
5. செயலாளர் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்
6. 1999 ஆம் ஆண்டுக் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்.
7. புதிய நிர்வாக சபையைத் தெரிவு செய்தல்
8. வேறு விடயங்கள்
9. நன்றி கூறல்
10. கடவுள் வணக்கம்

ஆ.அம்பலவிமுருகன்,
மு.சுந்தரலிங்கம்,
ஆதீனகர்த்தாக்கள்,
காரைநகர் சிவன் கோயில்.

வே.செல்வநாயகம்,
செயலாளர்,
காரைநகர் சிவன் கோயில்.
திருப்பணிச் சபை.

*குறிப்பு:*
எமது சபையின் அமைப்பு விதியின் பிரகாரம் அங்கத்தவர்கள் தான் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியுமாகையால் சபையின் அங்கத்தவர்களாகச் சேர்ந்து பணிபுரியவருமாறு அன்பர்களை அழைக்கிறோம். தற்சமயம் அங்கத்தவர்களாக உள்ளவர்களும் தங்கள் ஆண்டுச் சந்தாவைச் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும் பணிவுடன் வேண்டுகின்றோம்.

(78112)

## இதய அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில்
கிராம அலுவலராகக் கடமையாற்றும்
எஸ்.கே.சிவனடியான்
அவர்களின் அன்புத் தந்தையார்
சின்னத்தம்பி கணபதி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், உறவினர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் அன்னாருக்கு எங்கள் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபரும்,
பணிமனை உத்தியோகத்தர்களும்,
பணியாளர்களும்,
கிராம உத்தியோகத்தர்களும்,
வெளிக்கள உத்தியோகத்தர்களும்.

(78108)

## நினைவில் நீங்கா ஈராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 1957 - 09 - 17



இறைவன் அடியில் 1998 - 09 - 08

அமரர்

### வேலுப்பிள்ளை யோகநாதன்

(காவலாளர் - விவசாய திணைக்களம், திருநெல்வேலி)

பாசத்தின் உறைவிடமாய்!
பண்பின் திருவுருவாய்!
நேசத்தோடெமை அணைத்து
நேர்வழிகள் காட்டி வைத்த - சித்தா!
ஆண்டு இரண்டு ஆனபின்பும்
ஆறவில்லை நினைவலைகள் - உங்கள்
ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்

மனைவி, பெறாமக்கள்,
சகோதரங்கள்,
மருமக்கள், மச்சான்மார்,
சகலன்மார், மச்சாள்மார்.

*சரசாலை தெற்கு,*
*சரசாலை.*
தற்காலிக முகவரி:-
*வட்டு. கிழக்கு,*
*சித்தன்கேணி.*

(78055)

# தேவமாதாவை வாழ்த்துகின்றேன்

உலக மாந்தர் அனைவரின் பாவம் போக்க உதித்த விடிவெள்ளியாம யூபிலி ஆண்டின் நாயகன் இறைமகன் இயேசுவை மன்னுலகிற்குக் காண்பித்த வானத்து நிலவாம் தேவமாதாவின் பிறந்தநாளில் தாயை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

போரின் கொடூரத்தால் அவதியுறும் மக்கள் அனைவருக்கும் அன்னையின் அடைக்கலமும் அருளும் நிறைந்திட கரம் நீட்டி வரம் கேட்கிறேன். அன்னையவள் வெளிப்படுத்திய இறை வெளிப்பாடுகளை பக்தியுடன் ஏற்றுச் செயற்பட்ட அனைத்து உள்ளங்களுக்கும் உறவுகளுக்கும மனம் நிறைந்த நன்றிகளைக் கூறுகின்றேன். மரண ஓலங்கள் மலிந்துவிட்ட எம் மண்ணில் உண்மை விருட்சமாகி தூய்மை நிறைந்த விடியல் பூக்கள் மலர்ந்து தேசத்தைக் காத்திட அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுமாறு குழந்தை இயேசுவின் நாமத்தினால் இறைஞ்சுகின்றேன்.

**"உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம்"**

இறை உணர்வுடன்,
சூசைப்பிள்ளை மேரி இராஜேஸ்கனி

சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(78127)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப்பீட வருடாந்தப் பரீட்சைகள்

கலைப்பீட மாணவர்களின் வருடாந்தப் பரீட்சைத் திகதிகளில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

புதிய திகதிகள் பின்வருமாறு:-

1. பொதுக்கலை பகுதி i / சிறப்புக்கலை பகுதி i - 16.10.2000
2. பொதுக்கலை பகுதி ii / சிறப்புக்கலை பகுதி ii - 01.11.2000
3. இராமநாதன் நுண்கலைக்கழக இரண்டாம் வருட பரீட்சைகள் - 20.09.2000
4. இராமநாதன் நுண்கலைக்கழக மூன்றாம் வருட பரீட்சைகள் - 29.09.2000
5. இராமநாதன் நுண்கலைக்கழக நான்காம் வருட பரீட்சைகள் - 16.10.2000

மேற்படி பரீட்சைகள் தொடர்பான இதற்கு முன் வெளிவந்த பத்திரிகை விளம்பரங்கள் ரத்துச் செய்யப்படுகின்றன.

பதிவாளர்.
07.09.2000

(C/12854)


## பொன்விழா ஆராதனையும் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,செப்.8

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அமெரிக்க சுவாமிஜி தந்திரதேவமகாராஜ் அவர்களின் பொன்விழா ஆராதனையும், உப பணிமனைத் திறப்புவிழாவும் ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தில் நடைபெறவுள்ளன.

கலாபூஷணம் பே.சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்துவர்.

"ஈழவளநாட்டில் சுவாமிஜியின் அருட்பணிகள்" என்ற தலைப்பில் ப.சிவலோகநாதனும், "சுவாமிஜியின் ஆன்மீகச் சிந்தனைகள்" என்ற தலைப்பில் எம்.எஸ்.ஸ்ரீதயாளனும் உரையாற்றுவர். (இ-7)

## அழைப்புக் கடிதங்கள்

1999/2000 கல்வியாண்டில் மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் புலமைப்பரிசில் பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்புக் கடிதங்கள் யாழ்பல்கலைக்கழக மாணவ ஆலோசகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் அறிவித்துள்ளார். (இ-3)

## யுத்த சபையை நிறுவுமாறு கோரிக்கை

கொழும்பு,செப்.8

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தீவிரப்படுத்துவதற்கு "யுத்த சபை" ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் ஜானக பெரேரா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அஸ்கிரிய மற்றும் அமரபுர பீடங்களின் மகாநாயக்கர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று கொழும்பில் இடம்பெற்ற விசேட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

மகாநாயக்கர்களுக்கு எதிராகத் தெரிவித்த கருத்துக்களுக்காக அமைச்சர் எஸ்.பீ.திஸநாயக்க மன்னிப்புக் கோரவேண்டும் எனவும்-

அமைச்சர் தனது தொகுதியான ஹங்குரான்கெத்தவில் விசேட மாநாடு ஒன்றை நடத்தி அதில் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் - மகாநாயக்கர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-7)


# MATHS CENTRE NELLIADY

**A/L - 2000 எடுத்த மாணவர்களுக்கான விசேட**

**ENGLISH CLASS**

ஆசிரியர்- திரு.ஜோதி

பிரிவு III - அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஆரம்பம்: 10.09.2000 ஞாயிறு
8.00 a.m. (பழைய நேரம்)

(C/12810)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/உரும்பிராய் காளியம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

**ச.ஸ்ரீ சந்தனக்குருக்கள்** அவர்களுக்கு

'சிவாச்சார்ய சாது" என்ற பட்டம் சூட்டி தங்கப்பதக்கம் அணிவித்து வாழ்த்துப்பா வழங்கப்பட்டது.

(நேற்றைய (07.09.2000) உதயனில் **'சிவாச்சாரி சாது'** என்று தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தது)

- பரிபாலன சபை

(C/12849)



மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்

## கேள்வி கோரல்

எமது சங்கத்தில் 9227 வெற்றுச் சாக்குகளும், 5300 வெற்றுப் பைகளும் விற்பனைக்கு உண்டு. மீளளிப்பு வைப்பாக ரூபா 500 செலுத்தி சங்கத்தினால் வழங்கப்படும் பத்திரத்தில் தங்கள் கேள்விகளைக் குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு 14.09.2000த்துக்கு முன்னர் சங்கத்தில் ஒப்படைக்கவும்.

பொது முகாமையாளர்

மானிப்பாய் பல நோக்குக் கூ.சங்கம்,
மானிப்பாய்.

(C/12848)



# COMPUTER

இன்றைய கணனி உலகில்

உங்களிடம் கணனி இயந்திரம் இல்லையா?

பலதரப்பட்ட மொடல்கள்

* COMPUTER ACCESSORIES
* COMPUTER IN CARTRIDGES
* COMPUTER FLOPPY DISC
* PHOTOSTAT TONER POWDER

இன்னும் பல!

மேலும் விவரங்களுக்கு
தொடர்புகொள்ள நாடுங்கள்:

## லிங்கன் ஸ்ரோர்ஸ்

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/12852)



# திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஆவணி மாதம் 26 ஆம் நாள் (11.09.2000) திங்கட்கிழமை முற்பகல் 10.35 மணி முதல் நண்பகல் 12.33 மணி வரையுள்ள சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**அருமைநாயகம்**
(சாவ.ப.நோ.கூ.சங்கம்)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**மஞ்சுளா**
அவர்களுக்கும்

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திருமதி **மாணிக்கம் கந்தையா** குடும்பம்
நிரந்தர முகவரி:
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**
தற்காலிக முகவரி:
**பக்கஸ் லேன், மானிப்பாய்.**

திருமதி **மனோன்மணி**
**அம்பலவாணர்** குடும்பம்
**சுதுமலை தெற்கு,**
**ஆனைக்கோட்டை.**

**குறிப்பு:** மணமகன் வீட்டார் இடம்பெயர்ந்து இருப்பதால் தனிப்பட்ட அழைப்புகள் இல்லை. ஆகவே இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(78120)



## கணித அறிவு வளர்சோலை

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

**O/L 2000, 2001 ஆம்**

**ஆண்டுகளுக்கான புதிய பிரிவுகள்**

| கணிதம் | விஞ்ஞானம் |
|---|---|
| திரு.ஸ்கந்தா | இரா.செல்வவடிவேல் |

- துரித மீட்டல்.
- புள்ளித்திட்டம் இடுதலுடன் கூடிய 30ற்கு மேற்பட்ட கடந்தகால வினாவிடைகள்
- எதிர்பார்ப்பு வினாக்கள்

**ஆரம்பம்: 09.09.2000**

**(நாளை சனி மாலை 2.30)**

(C/12847)






த.சுபத்திரன்
(றொபேட்)

★ நாம் செய்யக்கூடியதை மக்களுக்கு உள்ளபடி சொல்வோம்.

★ மக்களின் தேவைகளுக்கு உண்மையாக உழைப்போம்.

**சுயேச்சைக் குழு - 02**



X



அ.வரதராஜப்பெருமாள்

(78133)

# அவசரகாலச் சட்டத்தை நீடிக்க நாடாளுமன்று 14இல் கூடுகிறது

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணையை விவாதிப்பதற்காக நாடாளுமன்றம் எதிர்வரும் 14 ஆம் திகதி கூட்டப்படவிருக்கிறது.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரத்தைக் கொண்டு, கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் விசேடமாகக் கூடவிருக்கிறது.

நாடாளுமன்றத்தைக் கூட்டாமல் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் உத்தரவை ஜனாதிபதி விடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் நாடாளுமன்றத்தை எதிர்வரும் 14ஆம் திகதி கூட்டுமாறு நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் டம்பிகா கித்துக்கொடவுக்கு நேற்று முன்தினம் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (இ-3-7)

# ஐ. தே. கட்சி அலுவலகம் மட்டக்களப்பில் எரிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் - காத்தான்குடிப் பகுதியில் அமைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் ஒன்று நேற்று முன்தினம் இரவு தீக்கிரையாக்கப்பட்டது.

மேற்படி அலுவலகத்திலிருந்த காகிதாதிகளும் முக்கிய ஆவணங்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அலுவலகமும் தாக்கி அழிக்கப்பட்டது. இனந்தெரியாத குழுவினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை முஸ்லிம் காங்கிரசின் ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளர் அப்துல் மஜீர் உமர் லெ.்.வ்வை குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்படிச் சம்பவத்தைக் கண்டித்து காத்தான்குடி கபுறடி மைதானத்தில் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த உண்ணாவிரதம் ஐ.தே.கவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலானா தலைமையில் நடைபெற்றது.

## குண்டு வீச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் காலத்தில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அமைதிச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் - என்று கூட்டணி சார்பில் வலியுறுத்தப்படும்-இப்படிக் கட்சி வட்டாரங்கள் மேலும் விவரித்தன.

## 3 படையினர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்தது.

விமானப்படையின் விமானங்கள் சரசாலை தெற்கில் உள்ள புலிகளின் நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தின. அதனால் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சிறுவனின் கைகள் துண்டிப்பு

மர்மமான பொருள் ஒன்றை வெடிக்க வைத்த சிறுவன் ஒருவன் தனது இரண்டு கைகளையும்தோள் மூட்டுடன் இழந்த பரிதாப சம்பவம் மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

ஆறுமுகம் ஞானசேகரன் (வயது 10) என்ற சிறுவனே இரண்டு கைகளும் துண்டிக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7-21)

## நாளை சிறப்பு மலர்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நடைபெறும் நாளைய தினம் உதயனில் சிறப்பு மலர் வெளிவருகிறது. சுன்னாகம் துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் நிறுவனத்தினர் இந்தச் சிறப்பு மலரை அமைத்துள்ளனர்.

## மோதல்களில் மூவர் உயிரிழப்பு

வவுனியா,செப்.8

யாழ்.குடாநாட்டில் படையினரின் 'சூரியக் கதிர்' தாக்குதல் நடவடிக்கையின் போது உயிரிழந்ததாகத் தெரிவித்து மூன்று புலி உறுப்பினர்களின் பெயர்களை புலிகளின் குரல் வானொலி நேற்று அறிவித்துள்ளது.

விந்தினி (வைரவநாதன் லிங்கேஸ்வரி - யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் செந்தில்வேல் (பாலசிங்கம் சுஜிதாஸ் - யாழ்ப்பாணம்), சிறப்பு எல்லைப்படை வீரர் அழகரசன் (அருணாசலம் ரஞ்சன் - முல்லைத்தீவு) ஆகியோரே இந்த மூவரும் ஆவர். (இ-9)

## கப்பல் மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அழைத்துச் செல்லப்படும் பயணிகள் நேரடியாகக் கப்பலில் ஏற்றப்படவிருப்பதால் பயணிகள் தமக்குத் தேவையான உணவு மற்றும் குடிதண்ணீரைப் பெறமுடியாது என்றும் -

எனவே பயணிகள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்கள் மற்றும் குடிதண்ணீரை யாழ்ப்பாணத்தில் இருந்தே எடுத்து வர வேண்டும் என்றும் சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

அதேநேரம் - பயணிகளை காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லும் பணியை காலை 11 மணிக்கு முடிக்க வேண்டும் என்பதால் பயணிகள் அதற்கு முன்னர் பிரசன்னமாக வேண்டும் என்றும் -

அதன்பின்னர் வருபவர்கள் பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## விமானங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்கள் பேரிரைச்சல்களை எழுப்புவதால் வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் பதற்றமடைந்து வருகின்றனர்.

இந்த விமானங்களின் பேரிரைச்சல் நோயாளிகளை மேலும் நோயாளிகள் ஆக்குவதால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலாக குண்டு வீச்சு விமானங்கள் தாழப் பறப்பதைத் தவிர்க்க வேண்டும். போர் விமானங்கள் வைத்தியசாலைச் சுற்றாடலில் தாழப் பறப்பதை தடுப்பதற்கு இந்தப் பகுதியை பாதுகாப்பு வலயமாக்கினால் பேருதவியாக இருக்கும்.

இவ்வாறு ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் அங்கு மேலும் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக யாழ். ஆஸ்பத்திரி உட்பட நகரப்பகுதி வான்பரப்பில் போர் விமானங்களும் ஹெலிகளும் தாழப் பறப்பதைக் காணமுடிகிறது. (ஐ-5-10-15)

# எய்ட்ஸ் தொற்றிய குடும்பஸ்தர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணம்!

யாழ்ப்பாணம்,செப்.8

பூர்வாங்கப் பரிசோதனைகள் மூலம் எய்ட்ஸ் நோயாளி எனக் கண்டறியப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் உயிரிழந்துள்ளார்.

வலிகாமம் வடக்குப் பகுதியைச் சேர்ந்த இந்த நபர் திருமணமாவதற்கு முன்பு, வேலை வாய்ப்பின் பொருட்டு வெளிநாடு சென்று வந்தவர் என்றும் -

அதன்பின்னர் இங்கு திருமணம் செய்து கொண்ட இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர் என்றும். தெரிவிக்கப்பட்டது.

மாறாத காய்ச்சலுடன் கடந்த முதலாம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இந்த நபர் நான்கு நாள்களின் பின்னர் அங்கு உயிரிழந்தார். இவருக்கு வயது 34. யாழ்.ஆஸ்பத்திரியில் இவரது இரத்தம் பூர்வாங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது எச்.ஐ.வி. தொற்றியிருப்பது தெரியவந்தது. இவரது சடலம் கடந்த 6ஆம் திகதி உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குடாநாட்டில் இனங்காணப்பட்ட 13ஆவது எய்ட்ஸ் நோயாளி இவர் ஆவார். இந்த நோயினால் மரணமானோர் எண்ணிக்கை இவருடன் சேர்த்துப் பத்தாக உயர்ந்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து திரும்புவோரால் இங்கு எய்ட்ஸ் வேகமாக பரவும் ஏது நிலை குறித்து மருத்துவ வட்டாரங்களில் கவலை எழுந்துள்ளது. (ஐ)

# விமானம் தாழப் பறந்தபோது கத்தி மார்பைப் பதம் பார்த்தது

யாழ்ப்பாணம்,செப்.8

தாழப் பறந்த "மிக்" விமானம் இளைஞர் ஒருவரின் மார்பை மேசைக் கத்தி பதம்பார்ப்பதற்கு வழி வகுத்துவிட்டது.

இச்சம்பவம் நேற்று ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச்சேர்ந்த கனகசபை ஜெயக்குமார் (வயது18) என்ற இளைஞனே கத்திக் குத்துக்கிலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளநீர் வெட்டிக் கொண்டிருந்த மேற்படி இளைஞர் விமானம் தாழப் பறந்து வந்ததைக் கண்டு பீதியடைந்து திடீரென முகம் குப்புறப் படுத்த போது கையில் இருந்த மேசைச் கத்தி மார்பில் குத்தி காயத்தை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7-15)

# பெரும் எண்ணிக்கையான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாளரிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது :-

யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் 12 சடலங்களை மட்டுமே வைத்துப் பாதுகாக்க முடியும். ஒரே சமயத்தில் பல சடலங்களை வைப்பதற்கு இடமில்லை. மோதல்களில் பலியானவர்களின் சடலங்களைக் கொண்டு வந்து அடுக்கி வைப்பதால் துர்நாற்றம் வீசுகிறது. பிரேத அறைக்கு அருகிலுள்ள சமையல் பகுதி, இரத்த வங்கி போன்ற இடங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் உட்பட நோயாளர்களும் பொதுமக்களும் இதனால் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்க வேண்டி உள்ளது. அத்துடன் படையினரால் ஒப்படைக்கப்படும் சடலங்களில் சிலசமயம் குண்டுகள் இருக்கக் காணப்படுவதால் இத்தகைய சடலங்களுக்கு அருகில் செல்ல ஊழியர்கள் அஞ்சுகின்றனர்.

அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மரணமானோரின் சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் எமது ஊழியர்கள் படையினரிடம் இருந்து பொறுப்பேற்ற பொழுது சடலங்களுடன் வெடிகுண்டுகளும் கிடக்கக் காணப்பட்டன.

இதனால் ஊழியர்கள் சடலங்களை கைவிட்டு பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து சென்றதுடன் அங்கு சிகிச்சை பெற வந்த நோயாளர்களும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர். சடலங்களைக் கொண்டு வந்தவர்கள் அந்தக்குண்டுகளை அகற்றிய பின்னரே சடலங்கள் பொறுப்பேற்கப்பட்டன.

படையினரால் இவ்வாறு ஒப்படைக்கப்படும் சடலங்கள் மரண விசாரணையோ அல்லது பிரேத பரிசோதனையோ எதுவுமின்றி மீண்டும் படையினரால் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இத்தகைய செயற்பாடுகளினால் நிர்வாக ரீதியில் பல சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது- இப்படி அவர் தெரிவித்தார்.(ஐ-5-15-10)

# தேர்தலில் போட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

செப்ரெம்பர் 5ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் வெளியான குறிப்பிட்ட செய்தியை வாசித்து மிகவும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன்.

இலங்கை நிர்வாக சேவையின் மிகவும் மூத்த அதிகாரியான நான் தொடர்ந்தும் சேவையில் நீடிப்பதோடு அமைச்சின் மேலதிகச் செயலாளராக தற்போதும் கடமையாற்றி வருகின்றேன். அரசியலில் பங்குபற்றவோ தேர்தலில் போட்டியிடவோ என்போன்ற மூத்த உத்தியோகத்தர்களுக்கு அரச சட்டப் பிரமாணங்களின்படி உரிமை கிடையாது.

தங்கள் பத்திரிகையில் வெளிவந்த செய்தி எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கக் கூடியதாகவும் வாசகர்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லக்கூடியதாகவும் இருப்பதால் உண்மையை சகலரும் புரிந்துகொள்ளும் வகையில் எனது இந்த அறிக்கையை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்- என்று உள்ளது.

## டிவகலாலாவும் மறுப்பு

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவும் மேற்படி செய்திக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் எண்ணம் தமக்கு இல்லையென்றும், எந்தக் கட்சியின் வேட்பாளர் நியமனப் பத்திரத்திலும் தாம் ஒப்பமிடவில்லையென்றும் தமது பெயர் துஷ் பிரயோகம் செய்யப்பட்டிருக்கலாம் என்றும் அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

*ஆசிரியர் குறிப்பு:*

ஜெயராட்ணம் அப்பாத்துரை, டிவகலாலா சுந்தரம ஆகிய இரு பெயர்களும் தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில், அந்தக் கட்சி அலுவலகத்தின் விலாசத்துடன் காணப்படுகின்றன. சம்பந்தப்பட்டவர்கள் தாம் அல்லர் என்று அறிவித்திருப்பதால் வாசகர்கள் அதனைக் கவனத்தில் கொள்ள வேண்டுகின்றோம்.

# தேர்தல் வன்செயல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள தேர்தல் வன்செயல்களில் துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் கொண்டு நடத்தப்பட்ட வன்முறைகளும் முந்திய தேர்தல்களை விட இரண்டு மடங்காகி உள்ளதாகவும் தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையத்தின் புள்ளிவிவரங்கள் மூலம் அறியவருகிறது.

இம்மாதம் 5ஆம் திகதி வரை மொத்தம் அறுபது தேர்தல் வன்செயல்கள் நடைபெற்றுள்ளன. இவற்றில் எழுபது சதவீதமானவை - 42 சம்பவங்கள் - உயிர், உடல் ஆபத்து விளைவிக்கும் பாரதூரமான வகைகளைச் சேர்ந்ததாகும்.


இதுவரை 4பேர் கொலையுண்டுள்ளனர். இக் கொலைகள் யாவற்றுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மீதே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மாற்றுக் கட்சி ஆதரவாளர்களுக்குக் கடும் காயங்களை விளைவித்த மொத்தம் 11சம்பவங்களில் பத்துக்குப் பொ.ம.ஐ.முன்னணி ஆதரவாளர்கள் மீதே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொ.ம.ஐ.முன்னணிக்கு அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களே பாரதூரமான வன்முறைகளைச் செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) மூன்றாவது இடத்தைப் பிடிக்கிறது.

வேட்பாளருக்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே பல இடங்களில் மோட்டார்சைக்கிள் பவனிகள் நடைபெற்றிருக்கின்றன. அதனால் தேர்தல் வன்செயல்களும் காயம் உண்டாக்கும் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. தெற்கின் பல மாகாணங்களில் அரசாங்க வளங்கள் தேர்தல் பிரசாரத்திற்காக துஷ்பிரயோகம் செய்யப்படுவது குறித்தும் முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக தேர்தல் வன்செயல் கண்காணிப்புக் குழு (C.M.E.V) தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. (அ)

ஸ்ரீ வல்லிபுரா போட்டோ
எதிர்வரும் 12.09.2000
கொழும்பிற்கு படச்சுருள்கள் அனுப்பி வைக்கப்படும்
புலோலி தெற்கு, புலோலி. 070-212720
545, பருத்தித்துறை வீதி, நல்லூர். 021-2604
(78)19)

இன்றைய வீடியோ CD வெளியீடு
* மூத்தவன்
ஓடியோ CD வெளியீடு
எலி பாயுதே (Remix)
மூர்த்தி வீடியோ மானிப்பாய்.
(C/12857)

இளைஞர்களே! யுவதிகளே!
படித்து முடித்து பட்டம் பெற்று
வேலையற்று வீதியில் அலைவது எதுவரை?...
உங்கள் கனவுகளை நனவாக்க,
உங்கள் வாக்குகள்
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கே! (ஈ.பி.டி.பி.)
வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!


1999ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக 53லட்சத்து 50ஆயிரம் ரூபா ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.
(C/12851)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-09-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.